பள்ளிக் கல்வித் துறை

திருச்சிராப்பள்ளி

**முசிறி கல்வி மாவட்டம்**

# 10

# தமிழ்

**மெல்லக்கற்கும் மாணவர்களுக்கான**
**சிறப்புக் கையேடு**

**2012 – 2013**

## அணிந்துரை

முசிறி கல்வி மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் அரசு பொதுத்தேர்வில் நல்ல தேர்ச்சி விழுக்காட்டைப்பெற மெல்லக்கற்கும் மாணவர்களை மாண்புமிகு தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் சீரிய ஆலோசனைப்படி பத்தாம் வகுப்புகள் கற்பிக்கும் ஆசிரியர்கள் தத்தெடுத்துள்ளனர். அனைத்து அரசுப்பள்ளிகளும் நூறு சதவீத தேர்ச்சி விழுக்காட்டை பெறும்பொருட்டு மெல்லக்கற்கும் மாணவர்கள் பயன் பெறும்பொருட்டு அனைத்துப்பாடங்களுக்கும் பிரசுரிக்கப்பட்ட கையேட்டை மாணவர்கள் கையில் தவழவிட்ட முசிறி மாவட்டக்கல்வி அலுவலர் அவர்களுக்கும் மற்றும் அனைத்துபாடக்குழு உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இக்கையேடு மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இக்கையேட்டைப் பயன்படுத்தி எல்லா மாணவர்களும் இக்கல்வியாண்டில் நூறு சதவீத தேர்ச்சி விழுக்காட்டைப் பெற வாழ்த்துகின்றேன்.

நன்றி! வணக்கம்.



க.செல்வக்குமார். M.Sc.M.Ed.,
முதன்மைக்கல்வி அலுவலர்.
திருச்சிராப்பள்ளி.

## அணிந்துரை

## கல்விக்கண் திறக்கும் கையேடு

முசிறி கல்வி மாவட்டம் பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்று தமிழகத்தின் முதல் கல்வி மாவட்டம் என்ற பெயரை சில மாதங்களில் பெற இருக்கிறது என நினைக்கும் போது உள்ளம் பேருவகை கொள்கிறது.

இக்கையேடு வெறுமனே பக்கங்களில் அச்சாகி வெளிவரவில்லை. இக்கையேட்டுக்குப் பின்னால் நமது முசிறி கல்வி மாவட்ட பாடக்கல்விக்குழு தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்களின் பல மாத இரவு பகல் உழைப்பும் அர்ப்பணிப்பும், நல்ல தரத்தை குறைந்த பக்கங்களில் கொண்டுவர மேற்கொண்ட போராட்டமும்தான் எப்போதும் என் நினைவுக்கு வரும். அதிலும் குறிப்பாக தலைமை ஆசிரியர்கள் திரு.ம.திருஞானம், திருமதி.ஆர்.நாகேஸ்வரி, திரு.ச.சேதுராமன், திரு.த.பாஸ்கர், திரு.சி.செல்வராசு, திரு.பி.ராபின்சன் ஆசிரியர்கள் திரு.சு.நாகேஷ், திரு.ஜி.முத்தமிழ்ச்செல்வன், திரு.பி.சிவராஜ், திரு.இரா.கார்த்திகேயன், திரு.சிவ.முரளி, திரு.ஐ.தங்கராஜ், திரு.கே.ராஜேந்திரன், திரு.கே.பூபாலன், திரு.ஆர்.சசிக்குமார், திரு.ஆர்.ரமேஷ் மற்றும் இதே வரிசையில் சிறப்பாகப் பணியாற்றியுள்ள அத்துனை தலைமை ஆசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கணினி உதவி செய்த நபர்களுக்கும் அச்சகத்தார் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வெ.ஜெயக்குமார். M.A.M.Phil.B.Ed.,
கூடுதல் முதன்மைக்கல்வி அலுவலர்,
அனைவருக்கும் கல்வி இயக்கம்.
திருச்சிராப்பள்ளி.

<u>குழுத்தலைவர்</u>

**வெ.இராமச்சந்திரன்** M.Sc.M.Ed.,

**மாவட்ட கல்வி அலுவலர்(பொறுப்பு)**

**முசிறி கல்வி மாவட்டம்.**

## <u>தமிழ் பாடக்குழு ஆசிரியர்கள்</u>

**எல்.கோவிந்தராசன்.**M.A.M.Ed.,
தலைமை ஆசிரியர்
அரசு உயர்நிலைப்பள்ளி,
சுக்காம்பட்டி.

**ப.முல்லை வேந்தன்.**M.A.M.Ed.,
தலைமை ஆசிரியர்
அரசு உயர்நிலைப்பள்ளி,
நாச்சம்பட்டி.

**த.பாஸ்கர்.**M.A.B.Ed.M.phil.,
தலைமை ஆசிரியர்
அரசு உயர் நிலைப்பள்ளி,
சோபனாபுரம்.

**தி.கீதா.**M.A.M.A.B.Ed.M.Phil.,
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
முசிறி

**இரா.சுப்பிரமணியன்.**M.A.B.Ed. M.phil
அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
தொட்டியம்.

**கு.செல்லதுரை.**M.A.M.A.M.Sc.M.phil.,
அரசு உயர்நிலைப்பள்ளி,
அலகரை.

**சிவ.முரளி.**M.A.B.Ed.M.phil.,
அரசு மேல்நிலைப்பள்ளி,
புலிவலம்.

**கோ.நாகேஸ்வரன்.**M.A. B.Ed.,
அரசு மேல்நிலைப்பள்ளி,
பாலசமுத்திரம்.

**மு.கி.சிவானந்தம்.**M.A.B.Ed.,
அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
தா. பேட்டை.

**வி.அகிலாண்டேஸ்வரி.**M.A.B.Ed.,
அமலா பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
முசிறி.

**ரெ.சரவணன்.**M.A.B.Ed M.phil.,
அரசு மேல்நிலைப்பள்ளி,
மூவானூர்.

**சி.தேவராசு.**M.A.B.Ed.,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சிறுநாவலூர்.

# ஆசிரியர் குழுவின் ஆலோசனைகள்

ஆசிரியப் பெருமக்களுக்கு வணக்கம்.

இக்கையேடு மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு மட்டும் கொடுத்து பயிற்சி அளிக்கவும். மனப்பாடச் செய்யுள் (முழுவதும்) பயிற்சி அளிக்கவும்.

அலகிடல், வாழ்வியல் திறன் (சூழ்நிலை), மொழியாக்கம், செய்யுளுக்கு வினா–விடை, வங்கிப்படிவம் போன்றவற்றில் கூடுதலாக மாதிரிகள் கொடுத்து பயிற்சி அளிக்கவும்.

நெடுவினா, சிறுவினா, துணைப்பாடம், பொதுக்கட்டுரைகள் ஆகியவற்றில் கருத்துக்கள் மிக குறைவாகவே கொடுக்கப்பட்டுள்ளது. அதை மட்டுமே அவர்கள் படித்து எழுதினால் போதுமானது.

செய்யுள், உரைநடையில் கொடுக்கப்பட்டுள்ள இரண்டு மதிப்பெண் வினாக்களில் விடைகளை பாடவாரியாகத் தொகுத்து எழுதினால், சிறு வினாவிற்கும், நெடு வினாவிற்கும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பாடவாரியாக உள்ள சிறுவினா, நெடுவினாக்களுக்குரிய விடைகளைப் பிரித்து எழுதினால் குறுவினாக்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மெல்ல கற்கும் மாணவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மையை போக்கி ‘செல்ல மாணவர்கள்’ என்று உற்சாகப்படுத்தி கற்பித்துப் பயிற்நி அளியுங்கள்.

இந்த குறைவான பகுதிகளையும் அழகான கையெழுத்துடனும், எழுத்துப் பிழையின்றியும் அடிக்கடி சிறு சிறு தேர்வுகள் மூலம் எழுதிப்பார்த்தால் வெற்றி நிச்சயம்.

வாழ்க வளமுடன்

**ஆசிரியர் குழு**

நிலை – 1.

# தமிழ் முதல் தாள்

## பிரிவு–I

## பகுதி: 1

## I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. செல்வத்தை நிலையாகக் கட்டும் கயிறாக வள்ளுவர் கூறுவது
   அ) ஒழுக்கம் **ஆ) காலமறிதல்**
   இ) அடக்கமுடைமை ஈ) பெரியோரைத் துணைக்கோடல்.
2. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்றத் தொடர் இடம் பெற்ற நூல்
   **அ) திருக்குறள்** ஆ) நாலடியார் இ) பழமொழி ஈ) ஆசாரக் கோவை
3. இளங்கோவடிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   அ) சோழ நாடு **ஆ) சேர நாடு** இ) பாண்டிய நாடு ஈ) தொண்டை நாடு.
4. கண்ணகியின் காற்சிலம்பில் உள்ள பரல்கள்
   அ) முத்து ஆ) பவளம் **இ) மாணிக்கம்** ஈ) மரகதம்
5. கம்பரை புரந்தவர்
   அ) ஔவையார் ஆ) புகழேந்தி **இ) சடையப்ப வள்ளல்** ஈ) சீதக்காதி
6. பெண் அடிமையானதற்கு உரிய காரணம் எந்த ஒன்று இல்லாமை?
   அ) வாக்குரிமை ஆ) பேச்சுரிமை **இ) சொத்துரிமை** ஈ) எழுத்துரிமை
7. கீழ்க்காண்பனவற்றுள் காந்தியடிகளின் மனங்கவர்ந்த குஜராத்திப் பாடலின் கருத்து
   **அ) இன்னாசெய்யாமை** ஆ) இன்சொல் கூறுதல் இ) எளிமை ஈ) சிக்கனம்
8. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை
   அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை **இ) பேச்சுக்கலை** ஈ) நடனக்கலை
9. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்
   **அ) ஜி.யு. போப்** ஆ) கால்டுவெல்
   இ) இராபர்ட் டி நோபிலி ஈ) வீரமாமுனிவர்
10. நெய்தல் கலியைப் பாடியவர்
    அ) ஓரம்போகியார் ஆ) கபிலர் **இ) நல்லந்துவனார்** ஈ) பரணர்
11. மாணிக்கவாசகர் பாடல்கள்__________ திருமுறையில் இடம்பெற்றுள்ளன
    அ) ஆறாம் **ஆ) எட்டாம்** இ) மூன்றாம் ஈ) ஐந்தாம்
12. நற்றிணையைத் தொகுப்பித்தவர்
    **அ) பன்னாடு தந்த மாறன் வழுதி** ஆ) இளம்பெருவழுதி
    இ) உக்கிர பெருவழுதி ஈ) ஔவையார்
13. திருக்குறள் __________ வெண்பாக்களால் ஆன நூலாகும்
    அ) சிந்தியல் **ஆ) குறள்** இ) நேரிசை ஈ) இன்னிசை
14. நற்றிணை__________ நூல்களைச் சார்ந்தது
    அ) பத்துப்பாட்டு **ஆ) எட்டுத்தொகை** இ) பதினெண்கீழ்க்கணக்கு ஈ) நீதி
15. அழுது அடியடைந்த அன்பர் என அழைக்கப்படுபவர்
    **அ) மாணிக்கவாசகர்** ஆ) திருநாவுக்கரசர் இ) சுந்தரர் ஈ) அப்பர்
16. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாடியவர்
    அ) கவிமணி ஆ) பாரதிதாசன் **இ) பாரதியார்** ஈ) நாமக்கல் கவிஞர்
17. திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல்
    அ) நால்வர் நான்மணிமாலை **ஆ) திருவள்ளுவமாலை** இ) இரட்டை மணிமாலை
18. இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே எனப் பாடியவர்
    அ) பாரதியார் ஆ) சுரதா **இ) பாரதிதாசன்**
19. ஏலாதி _____________ நூல்களுள் ஒன்று
    அ) பதினெண்மேற்கணக்கு **ஆ) பதினெண்கீழ்க்கணக்கு** இ)காப்பியம்
20. மருந்துப் பொருட்களின் பெயரால் அமையப்பெற்ற இருநூல்கள்
    அ) திருக்குறள், நற்றினை **ஆ) திரிகடுகம், ஏலாதி** இ) நற்றினை, அகநானூறு
21. பதினாறு செவ்வியல் தன்மைகளைக்கொண்டது செம்மொழி எனக் கூறியவர்
    அ) திரு.வி.க ஆ) உ.வே.சா **இ) பாவாணர்**

22. இன்றைய மதுரையில் ______________ தமிழ்ச்சங்கம் இருந்தது.
**அ) மூன்றாம்** ஆ) இரண்டாம் இ) முதலாம்
23. சரசுவதி அந்தாதி ______________ இயற்றிய நூல்களுள் ஒன்று.
**அ) கம்பர்** ஆ) ஒட்டக்கூத்தர் இ) புகழேந்தி
24. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது
அ) பத்ம ஸ்ரீ **ஆ) பாரதரத்னா** இ) பத்மவிபூஷண்
25. மேடைப்பேச்சில் மக்களை ஈர்த்தவர்
**அ) பேரறிஞர் அண்ணா** ஆ) மு.வரதராசனார் இ) கா.அப்பாத்துரையார்
**26. சேக்கிழாரைப் புகழ்ந்து பாடியவர்**
அ) கம்பர் ஆ) குமரகுருபரர் **இ) மீனாட்சி சுந்தரம் பிள்ளை** ஈ) வள்ளலார்.

## பகுதி : 2

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. தம்மை அடைக்கலமாகக் கொண்டவரின் துயரை நீக்குதலே **செல்வம்** என நற்றிணை குறிப்பிடுகிறது.
2. பெரியபுராணத்திற்குச் சேக்கிழார் இட்ட பெயர் **திருத்தொண்டர் புராணம்.**
3. “திகழ்பா ஒரு நான்குஞ் செய்யுள் வரம்பாகப் புகழ்பா வினங்கள் மடைப் போக்கா” இப்பாடல் அடிகளில் செய்யுளின் வரம்புகளாக குறிப்பிடப்படுபவை **நால்வகைப் பாக்கள்.**
4. மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் **பொருளியல்** பேராசிரியராகப் பணியாற்றினார்.
5. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு **வேடிக்கையாய்** இருக்கும்.
6. தமிழர்கள் நிலத்தை **ஐந்து** வகைகளாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.
7. கம்பராமாயணம் **ஆறு** காண்டங்களை உடையது.
8. புரட்சிக்கவிஞர் என அழைக்கப்படுபவர் **பாரதிதாசன்** ஆவார்.
9. மாணிக்கவாசகர் கட்டிய கோவில் **திருப்பெருந்துறையில்** உள்ளது.
10. அரி என்னும் சொல்லின் பொருள் **நெற்கதிர்.**
11. நந்திக் கலம்பகம் **96** வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
12. திருவாசகத்திற்கு உருகார் **ஒருவாசகத்திற்கும்** உருகார்.
13. திருக்குறளில் **133** அதிகாரங்களும் **1330** குறட்பாக்களும் உள்ளன.
14. ஒழுக்கத்தின் எய்துவர் **மேன்மை** இழுக்கத்தின் எய்துவர் **எய்தாப்** பழி
15. தமிழர் மனித வாழ்வை **அகம், புறம்** எனப் பிரித்தனர்
16. குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி **தமிழ்**
17. 2004 ஆம் ஆண்டு **அக்டோபர்** திங்களில் தமிழ் மொழியைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்தது.
18. தமிழ், மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர் **மாக்சுமுல்லர்** ஆவார்
19. இரட்டைக்காப்பியங்கள் என்பன சிலப்பதிகாரம், **மணிமேகலையும்** ஆகும்.
20. சிலப்பதிகாரம், மணிமேகலை, **சீவகசிந்தாமணி,** வளையாபதி, **குண்டலகேசி** என்பன ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்
21. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள **பெருநோய்** ஒன்று உண்டு
22. பெரியார் சமூக **முரண்களை** எதிர்த்தவர், மூடக்கருத்துக்களை **முட்டறுத்தவர்.**
23. வெறும் பேச்சுக்கும், **மேடைப்** பேச்சுக்கும் வேறுபாடு உண்டு.
24. பேச்சுமுடிவில் **சுருக்கத்தைக்** கூறிக்கருத்தை நிலைநாட்டி முடிக்க வேண்டும்.
25. நடிப்பாற்றல் மிக்கவரையும், நடிப்பை கற்று தருபவரையும் **இயக்குநர்** என அழைப்பார்.
26. படப்பிடிப்புக் கருவியை **நகர்த்தும் வண்டியில்** பொருத்துவதும் உண்டு.
27. போலிப் புலவர்களைத் தலையில் கொட்டுபவர் **அதிவீரராம பாண்டியன்**
28. போலிப் புலர்வர்களின் தலையை வெட்டுபவர் **ஒட்டக்கூத்தர்.**
29. இல்லாரை **எல்லாரும்** எள்ளுவர்
30. அறனீனும், இன்பமும் ஈனும் **திறனறிந்து** தீதின்றி வந்த பொருள்.
31. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள் **தேவாரம்** என அழைக்கப்படுகிறது.
32. அனைத்தையும் இழப்பினும் உண்மையை இழக்கிலேன் எனக் கூறியவர் **அரிச்சந்திரன்**

33. திருக்குறளை மொழி பெயர்த்த உருசிய அறிஞர் **தால்சுதாய்**

34. தார் வேந்தன் கோல் நோக்கி வாழும் **குடி** போன்றிருந்தேனே.

35. இராமலிங்கர் சத்திய தருமச்சாலையை நிறுவிய இடம் **வடலூர்.**

36. சங்ககாலத்தில் பெண்கள் **கடல்** கடந்து செல்லக்கூடாது.

## பகுதி : 3

### பொருத்துக

| நூல் | | ஆசிரியர் |
|---|---|---|
| 1. தேவாரம் | - | திருநாவுக்கரசர் |
| 2. சீறாப்புராணம் | - | உமறுப்புலவர் |
| 3. கலித்தொகை | - | நல்லந்துவனார் |
| 4. பூத்தது மானுடம் | - | சாலை இளந்திரையன் |

| சொல் | | பொருள் |
|---|---|---|
| 1. இரை | - | மனம் |
| 2. கழல் | - | அணிகலன் |
| 3. ததும்பி | - | பெருகி |
| 4. மெய் | - | உடல் |

## பகுதி-4

### தொடர்களுக்கு ஏற்ற வினா அமைக்க

1. **இலக்கணம் வகுத்த பின்பே இலக்கியங்கள் தோன்றின.**
   எதனை வகுத்த பின் இலக்கியங்கள் தோன்றின?
2. **இராமலிங்கர் தமிழ் மொழியை இறவாத நிலை தரும் என்று கூறினார்.**
   தமிழ் மொழியை இறவாத நிலை தரும் என்று கூறியவர் யார்?
3. **தமிழர்கள் அரபு நாட்டுடனுன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.**
   தமிழர்கள் எந்த நாட்டுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்?
4. **தொழில் நுட்ப பயிலகத்தில் பயில்வோருக்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன.**
   எவற்றில் பயில்வோருக்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன?
   எதில் (அ)எவற்றில் பயில்வோருக்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன?
5. **பெண்கள் உரிமைப் பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.**
   பெண்கள் எதனைப் பெற்று புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்புகிறார் பெரியார்?
6. **பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.**
   எந்தப் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்?
7. **செய்திப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நாம் இருப்பிடத்திலேயே கண்டுகளிக்கலாம்.**
   எவற்றின் வாயிலாக நிகழ்வுகளை நாம் இருப்பிடத்திலேயே கண்டுகளிக்கலாம்?
8. **காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.**
   பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் என எதைக் காந்தியடிகள் கருதினார்?

# பிரிவு – II

## பகுதி:- 1.

### செய்யுள் - குறுவினாக்கள் ( 2 மதிப்பெண்கள்)

1. **இறைவனை வாழ்த்தும் போது மாணிக்கவாசகர் எந்நிலையிலிருந்தார்?**
   **உடல் சிலிர்த்தது. உள்ளம் நடுங்கியது. கண்களில் நீர் பெருகியது. தலைமேல் கை குவித்து வணங்கினார்.**

2. **உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?**
   - உயினும் ஓம்பப்படுவது ஒழுக்கம்.
   - ஏனெனில் அது ஒருவனுக்கு எல்லாச் சிறப்புகளையும் தருகிறது.
3. **நன்றிக்கு வித்தாவது எது?**
   - நன்றிக்கு வித்தாவது நல்ல ஒழுக்கம்.

4. **என்றும் இடும்பை தருவது எது?**
    - தீய ஒழுக்கமே என்றும் துன்பம் தருவது.

5. **கூகையையும் காக்கையையும் எடுத்துக்காட்டி வள்ளுவர் விளக்குவது யாது?**
    - பகற்பொழுதில் வலிமையான கூகையை காக்கை வென்று விடும்.
    - அதுபோல பகைவரை வெல்லக் கருதும் அரசர் காலம் அறிந்து செயல்பட வேண்டும்.

6. **ஞாலம் கருதினும் கைகூடும் - எப்போது?** 4
    - தான் செய்யும் செயலைக் காலம் அறிந்து இடத்தோடு பொருந்துமாறு செய்தல் வேண்டும்

7. **கையுறைப் பொருள்களாகப் குகன் கொண்டு சென்றன எவை? யாருக்குக் கொண்டு சென்றான்?**
    - தேனும், மீனும்
    - இராமனுக்குக் கொண்டு சென்றான்.

8. **குகனின் வேண்டுகோள் யாது?**
    - குகன் இராமனுக்கு தன்னால் இயன்ற தொண்டினை செய்து கொண்டு அங்கேயே தங்கி இருக்க அனுமதி வேண்டினான்.

9. **ஐம்பெரும் காப்பியங்ஙள் என்பவை எவை?**
    - 1. சிலப்பதிகாரம், 2. மணிமேகலை, 3. சீவக சிந்தாமணி, 4. வளையாபதி, 5. குண்டலகேசி,

10. **பாவேந்தர் பாரதிதாசன் இயற்பெயர் என்ன?**
    - கனக சுப்பு ரத்தினம்

11. **அப்பூதியஅடிகளார் எத்தகைய பண்பாளர்?**
    - களவு, பொய், காமம், சினம் முதலிய குற்றங்கள் நீங்கியவர்.

12. **நும் பேர் எழுதாதே வேறொருவர் முன்னெழுத வேண்டிய காரணம் என் சொல்? யார் யாரிடம் கூறியது?**
    - திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் கூறியது

13. **“இப்போது இங்கு அவன் உதவான்”- யார், யாரிடம் கூறியது?**
    - அப்பூதியடிகள், திருநாவுக்கரசரிடம் கூறியது.

14. **பொருள் அல்லாரைப் பொருளாகச் செய்வது - எது?**
    - பொருட்செல்வம்

15. **வேந்தற்குரிய பொருட்கள் யாவை?**
    - அரசுரிமையால் வந்த பொருள்
    - மக்கள் வரியாகத் தந்த பொருள்
    - பகைவரை வென்றதால் வரும் திறைப் பொருள்

16. **சிவ பெருமான் எத்தகையன்?**
    - எவருக்கும் அடிமையாகாதத் தன்மையன்
    - ஒரு காதில் சங்கினாலான குண்டலத்தை அணிந்தவன்

17. **ஆற்றுதல் என்பது யாது?**
    - வருந்தி வந்தோருக்கு உதவுதல்

18. **பண்பு எனப்படுவது யாது?**
    - சான்றோர் வழி அறிந்து ஒழுகுதல்

19. **அறிவு எனப்படுவது யாது?**
    - அறிவற்றவர்கள் கூறும் சொற்களைப் பொறுத்தல்.

20. **நந்திக் கலம்பக உறுப்புகள் நான்கினைக் கூறுக**
    - அம்மானை. ஊசல்,மறம், தவம்

21. **நந்திக் கலம்பகம் யார் மீது பாடப் பெற்றது?**
    - பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன் மீது பாடப்பெற்றது

22. **ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன?**
    - நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்

## பகுதி 2

## உரைநடைப் பகுதி

1. **தமிழ்மொழி குறித்து டாக்டர் எமினோ கூறுவது யாது?**
    - இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது என்றார் எமினோ.
2. **உலகில் உள்ள மொழிகளில் இலக்கிய இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை?**
    - மூவாயிரம்
3. **தமிழ் மொழியின் தனித் தன்மைகளை எழுதுக**
    - இலக்கிய, இலக்கண வளம் கொண்டது
    - தனக்கென தனிநோக்கும், போக்கும் கொண்டது
4. **மொழி மாற்றம் என்றால் என்ன?** **5**
    - ஒரு மொழி படத்தை மற்ற மொழியில் மாற்றி அமைக்கும் முறைக்கு மொழி மாற்றம் என்று பெயர்.
5. **கல்விப்படங்களின் வாயிலாக நாம் அறிவது யாவை?**
   பல்வகை விலங்குகளின் வாழ்க்கை, பன்னாட்டு மக்களின் வாழ்க்கை, நேரில் காணமுடியாத பல இடங்கள்,ஆகியவற்றைப் பற்றித் தெரிந்துகொள்ள முடிகிறது.
6. **செய்திப்படங்களின் வாயிலாக நாம் அறிவது யாவை?**
    - உலகில் பல்வேறு பகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் படமாக்கிக் காட்டுவது செய்திப்படமாகும்
7. **கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?**
    - குமரிமலை, ப.்றுளி ஆறு
8. **ஏற்றுமதி, இறக்குமதி பற்றி கூறும் நூலகள் யாவை?**
    - பட்டினப் பாலை, மதுரைக் காஞ்சி
9. **ஞாலம் - பெயர்க்காரணம் கூறு**
    - ‘ஞால்’ என்னும் வேர்ச்செல்லில் தோன்றியது.
    - ஞால் என்பதற்கு தொங்குதல் என்று பெயர்
    - எவ்வித பற்றுக் கோடுமின்றி உலகம் தொங்கிக் கொன்டிருப்பதை இது உணர்த்துகிறது
10. **நோய் வருவதற்கான காரணங்கள் பற்றி வள்ளுவர் கூறுவது என்ன?**
    - உடலில் வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய மூன்றனுள் ஏதேனும் ஒன்றின் அளவு குறைந்தாலும் மிகுந்தாலும் நோய் வரும்.
11. **காந்தியடிகளின் அறப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை?**
    - கதர் இயக்கம், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு
12. **இந்தியாவின் வாழ்வு குறித்து காந்தியடிகள் கூறுவது யாது?**
    - இந்தியாவின் வாழ்வு என்பது இலட்சக்கணக்கான கிராமங்களின் வாழ்வு
13. **வள்ளலாரின் முழக்கம் யாது?**
    - “அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங் கருணை” உயிர் இரக்கம்
    - ஆன்ம நேய ஒருமைப்பாடு
14. **சத்திய தரும சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?**
    - சாதி மத வேறுபாடின்றி பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார்.
15. **வேலை வாய்ப்பினை உருவாக்கித் தரும் அமுத சுரபியாக விளங்குபவை யாவை?**
    - மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் முதலியன
16. **தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில் நுட்பத் துறைகள் யாவை?**
    - உயிரி தொழில் நுட்பம்
    - நுண்ணியல் தொழில் நுட்பம்

**17. இடைநிலை ஆசிரியர் பயிற்சி குறித்து எழுதுக**

- மேல்நிலை கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள், இடைநிலை ஆசிரியர் கல்விப் பயிற்சியில் இரண்டாண்டுகள் படித்துத் தேர்ச்சி பெற்றால் இடைநிலை ஆசிரியராகப் பணியில் சேரலாம்.

## பிரிவு –III

## பகுதி – 1

**ஆறுவரிகளுக்கு மிகாமல் விடையளிக்க வேண்டிய 4 மதிப்பெண் வினா–விடைகள் செய்யுள்.**

1. மாணிக்கவாசகர் இறைவனிடம் எவ்வாறு வேண்டுகிறார்?

i) பக்தியில் உடல் சிலிர்த்தது.
ii) உள்ளம் நடுங்கியது.
iii) கண்களில் நீர் பெருகியது.
iv) தலைமேல் கைகுவித்தார்.
v) பொய்யை விலக்கி உன்னைப் புகழ்ந்தேன்
vi) எனக்கு அருள்புரிவாயாக – என்று வேண்டினார்.

2. **பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?**

1. பணிவாக இருத்தல்
2. நல் வழியில் நடத்தல்
3. சான்றோர் அறிவுரையைப் பின்பற்றுதல்
4. .நல்ல நூல்களின் வழி நடத்தல்

3. **சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?** 6

i). பொன், மணி, முத்து, பவளம், ஆகியவை வேறு வேறு இடங்களில் பிறக்கும்
ii). அணிகலன் ஆகும் போது இவை ஒன்றாக சேரும்
iii). அதைப்போல, சான்றோர் வேறு வேறு இடங்களில் இருந்தாலும்
iv). தக்க சமயத்தில் ஒன்று சேர்வர்.

**5. வாயிற் காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான்**

கொற்கை துறைமுகத்தின் தலைவனே வாழ்க!,
பொதிய மலையின் தலைவனே வாழ்க!
பழியில்லாத பஞ்சவனே வாழ்க! என்று வாழ்த்தினான்.

**6. சிலப்பதிகாரம் காட்டும் சோழ நாட்டுமன்னர்களின் சிறப்புகள் யாவை?**

அடைக்கலமாக வந்த புறாவுக்காகத் தன் உடலையே தந்தான் சிபி.
பசுவின் கன்றைக் கொன்ற தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்றான் மனுநீதி.

**7. கண்ணகிக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய மறுமொழி யாது?**

கள்வனைக் கொலை செய்வது கொடுங்கோல் அன்று.
அதுவே அரச நீதி என்றான் பாண்டியன்.

**8. தமிழ்மொழி வளர்ச்சியடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிமுறைகள் யாவை?**

பிறர் உதவி இல்லாமல் படிக்க நூல்கள் எழுத வேண்டும். தமிழை மதங்களுக்குள் அடக்கக் கூடாது. இலவச நூல் நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும்.

**9. செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை?**

எளிய நடையில் நூல்கள் எழுத வேண்டும். இலக்கண நூல் புதிதாக எழுத வேண்டும். புதிய சிந்தனைகளைப் படங்களுடன் நூல்களாக வெளியிட வேண்டும்.

10. **தமிழர் எதற்கு நாண வேண்டும்?**

வறுமையினால் ஒரு தமிழன் படிக்கவில்லை என்றால் இங்குள்ள தமிழர் எல்லாரும் நாண வேண்டும்.

**11. சீதை இலக்குவன் ஆகியோரிடம் குகனைப்பற்றி இராமன் கூறியதென்ன?**

குகனின் கருத்தைக் கேட்ட இராமன் சீதையையும் இலக்குவனையும் பார்த்தான். பிறகு அவர்களிடம், “இவன் நம்மிடம நீங்காத அன்பு உடையவன்” என்று கூறினான்.

**12. விருத்த மாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை?**

குகன் கொண்டுவந்த தேனும், மீனும் அமுதத்தை விடச் சிறந்தவை. இவற்றை ஏற்றுக் கொண்டதே உண்டதற்குச் சமம் என்றான் இராமன்.

**13. தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றினைப் பாடல் வழித் தொகுத்து எழுதுக.**

அரசனால் பாராட்டப்படுவது செல்வம் அன்று யானை, தேர், குதிரை ஆகியவற்றில் செல்வதும் செல்வம் அன்று. அடைக்கலமாக வந்தவர்களைக் காப்பாற்றுவதே செல்வமாகும் என்றாள் தோழி. ஸ

**14. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?**

பொன், முத்து, பவளம், மாணிக்கம் ஆகியவை வேறு, வேறு இடங்களில் பிறக்கும். ஆனால் மாலையாகக் கோர்க்கும்போது ஒன்று சேரும். அது போலச் சான்றோர் ஒன்றாகச் சேர்வர்.

**15. வயலின் வரப்புகளாகக் கூறப்படுபவை யாவை?**

பாவகை நான்கும் வயலின் வரப்புகள் ஆகும். அவை:வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.

**16. வயல்தரும் விளைவுகள் யாவை?**

வயல்தரும் விளைபொருள்கள் நான்கு. அவை: அறம், பொருள், இன்பம், வீடு

**17. போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?**

போலிப் புலவர்களின் தலையில் குட்டுபவர் அதிவீரராம பாண்டியன்
செவியை அறுப்பவர் வில்லிப்புத்தூரார்
தலையை வெட்டுபவர் ஒட்டக்கூத்தர்.

**18. கலித்தொகை – குறிப்பு எழுதுக.**

எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று.
கலிப்பாவால் அமைந்தது.
நாடகப்பாங்கில் அமைந்தது.
ஐந்து பிரிவுகளை உடையது.

15. **கலம்பகம் - குறிப்பு எழுதுக.**

96 வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று.
புயம் முதலான பலவகைப் பொருள்களைப் பாடுவது.
கலம் + பகம் = கலம்பகம்
18 உறுப்புகளைக் கொண்டது.

16. **சாதனைப் பூக்கள் என்று சாலையார் எவற்றைச் சுட்டுகிறார் ?**

1. பூக்கும் வரை செடிகள் ஓய்வு எடுப்பது இல்லை
2. செடியின் வெற்றி பூவில்தான் உள்ளது.
3. வெற்றியைக் கண்டு துன்பம் ஓடிவிடும்.
4. இன்று ஓய்வு எடுத்தால் இரவுக்குள் என்னென்ன ஆகுமோ? என்று சாலை இளந்திரையன் சுட்டுகிறார்.

17. **.புலியின் கொடுஞ் செயல்களாக உமறுபுலவர் கூறுவன யாவை?**

புலி சிங்கத்தைத் தவிர பிற விலங்குகளைக் கொல்லும்
யானையையும் கொன்று இரத்தத்தையும் குடிக்கும்
மலையும் அதிரும்படி உறுமும்.

**18. நந்திவர்மன் பெருமைகளாக நந்திக் கலம்பகம் கூறுவன யாவை?**

முத்துக்களைக் கொடுத்து நெற்கதிரைக் கொண்டுவரும் காவிரி நாட்டின் தலைவன்.
நந்திவர்மனை வணங்காத அரசர்கள் வானுலகைத்தான் ஆட்சி செய்வார்கள்.

**19. குலசேகர ஆழ்வார் திருவித்துவக் கோட்டு இறைவனிடம் வேண்டுவது யாது?**

இறைவனே! நீ எமக்கு அருள் புரியவில்லை என்றாலும் எனக்கு வேறு பற்று இல்லை. மன்னன் துன்பம் செய்தாலும் மக்கள் அவனையே நம்புவர். அதுபோல நானும் உன்னையே நம்புகிறேன்.

## பகுதி – 2

**ஆறுவரிகளுக்கு மிகாமல் விடையளிக்க வேண்டிய 4 மதிப்பெண் வினா-விடைகள் (உரைநடை)**

**1. பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை?**

பெண்கல்வி சமூக மாற்றத்துக்கு முக்கியம்.
பெண்களுக்கு உலகப் படிப்பையும் ஆராய்ச்சிப்படிப்பையும், கொடுக்க வேண்டும்.
பெண்களை பகுத்தறிவு இல்லாத சீவன்களாக வைத்திருப்பது பெருங்கொடுமை.

2. **பெண்ணுரிமையை விளக்குக.**
   பெண்கள் உரிமை பெற்று புது உலகைப் படைக்க வேண்டும். கணவனுக்கு மட்டும் உழைக்கும் அடிமையாக இருக்கக் கூடாது.
   சமூகத் தொண்டு செய்து புகழ்பெற வேண்டும்.
3. **மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?**
   மணக்கொடை ஒரு பெரு நோய். பெற்றோர் கல்விச் செலவை முதலீடாக எண்ணுகின்றனர். அதை வட்டியுடன் வாங்கத் துடிக்கின்றனர். இளைஞர்கள் இதை ஒழிக்க வேண்டும்.
4. **பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?**
   நல்ல பேச்சுக்குத் தொடக்கமே அடித்தளம். சுருக்கமான முன்னுரையுடன் தொடங்க வேண்டும். இடத்திற்கு ஏற்பத் தொடக்கவுரை அமைய வேண்டும்.
5. **கடல் வாணிகம் குறித்து எழுதுக**
   பொன், மணி, முத்து, துகில் ஆகியவற்றை கடல்வழியே அனுப்பினர்.
   கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுடன் கடல் வாணிகம் செய்தனர்.
   மன்னன் சாலமனுக்கு யானைத்தந்தமும், மயில் தோகையும் அனுப்பப்பட்டன.
6. **உழவுத் தொழில் குறித்து எழுதுக.**
   உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்பது குறள். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்பது புகழ் மொழி. வயல் மருத நிலம் ஆகும். அதன் தலைவனை வேந்தன் எனப் போற்றினர்.
7. **காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது – விளக்குக. (அல்லது)**
   **காந்தியடிகள் வாய்மையைக் கடைப்பிடிக்க அடிப்படையாக அமைந்த நிகழ்ச்சி எது?**
   காந்தி அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்தார். முனிவரின் சதியால் மனைவி, மகன் ஆகியோரைப் பிரிந்து சுடுகாட்டில் பணி செய்கிறான் அரிச்சந்திரன். அப்போதும் அவன் பொய் சொல்லவில்லை. தாமும் உண்மையே பேச முடிவு செய்தார் காந்தி.
8. **மனித நேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?**
   நான் தேச பக்தனாக இருப்பதற்குக் காரணம் நான் மனித நேயத்துடன் இருப்பதுதான். நான் ஒரு குஜராத்தியன் என்பதைவிட இந்தியன் என்பதே பெருமைக்குரியது என்கிறார் காந்தி.
9. **தொழில்நுட்பக் கல்வி குறித்து எழுதுக.**
   பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றால் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் சேரலாம். இதில் பல துறைகள் உண்டு. இதில் படித்தால் இக்காலக்கட்டத்தில் வேலை வாய்ப்பு உண்டு. பிறகு இளம் கல்வியியல் பட்டம் பெற்றால் பட்டதாரி ஆசிரியராகப் பணி பெறலாம்.
10. **சிறுதொழில் பயிற்சி பற்றிக் குறிப்பு எழுதுக.** 8
    பத்தாம் வகுப்பில் தேர்ச்சிப் பெற்றாலும், பெறாவிட்டாலும் தொழில்பயிற்சி நிறுவனத்தில் சேரலாம். ஓராண்டு அல்லது ஈராண்டு பயிற்சி பெறலாம். கம்மியர், கடைசல் படிப்பவர் போன்ற வேலைகளைப் பெறலாம்.
11. **இராணுவம், காவல் முதலிய பணிகளில் சேர்வதற்கான தகுதிக் கூறுகள் யாவை?**
    பனிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற வேண்டும். முதலில் உடற்கூறுத் தேர்வு நடைபெறும். பிறகு எழுத்துத் தேர்வு நடைபெறும். இவற்றில் தேர்ச்சிப் பெற்றால் பணியில் சேரலாம்.

## பிரிவு – IV (மதிப்பெண்கள் : 10)

**கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

தித்திக்குத் தெள்ளமுதாய், தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப்படுந் தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்.

**வினாக்கள்**

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
2. முத்தமிழ் - இத்தொகைச் சொல்லை விரித்தெழுதுக.
3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.
4. உவந்துரைக்கும் - பிரித்தெழுதுக.
5. விளம்பக்கேள் - பொருள் கூறுக.

(இது போல வேறு சில பாடல்களைக் கொடுத்து பயிற்சி அளிக்கவும்)

**கீழ்காணும் உரைநடைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க**

வினையே ஆடவாக்கு உயிர் என்கிறது குறுந்தொகை. முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை என்கிறது தொல்காப்பியம். சங்க காலத்தில் பொருளீட்டுவோர் ஆண்களே எனவும், பெண்கள் குடும்பத்தை பொறுப்புடன் நடத்த வேண்டும் எனவும், பெண்கள் கடல்கடந்து செல்லக்கூடாது எனவும் கூறி வந்தனர். இன்று, இந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது. ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் எல்லாத் துறைகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள். இன்றைய சூழலில் இருவரும் வருவாய் ஈட்டினால்தான் குடும்பத்தைச் சிறப்பாக நடத்த இயலும்.

பள்ளிக்கல்வியை முடித்த ஒருவர், அதற்குமேல் என்னென்ன படிப்புகளை மேற்கொண்டு வேலைவாய்ப்பினைப் பெறலாம் என்பது குறித்த விழிப்புணர்வை ஒவ்வொருவரும் பெறவேண்டும்.தற்போது மேனிலைக்கல்வியில் தேர்ச்சி என்பதுதான் பெரும்பாலான பணிகளுக்கும் அடிப்படை என்னும் நிலை உருவாகியுள்ளது.

**வினாக்கள்**

1. ஆடவர்க்குயிராகக் குறுந்தொகை எதைக் குறிப்பிடுகிறது?
2. முந்நீர் - இந்தொகைச் சொல்லை விரித்தெழுதுக.
3. மகடூஉ - இச்சொல்லின் பொருள் யாது?
4. தற்போது பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படையாக அமையும் கல்வி எது?
5. இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பைத் தருக.

**(இது போல வேறு சில உரைநடைப்பகுதிகளாகக் கொடுத்து பயிற்சி அளிக்கவும்)**

# பிரிவு: V

## பகுதி: 1

## செய்யுள் நெடுவினா

**1. ‘தேரா மன்னா’ என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?**

1. நீதி வழங்காத மன்னனே! உன்னிடம் கூறுவது ஒன்று உண்டு.
2. சிபி, மனுநீதிச் சோழன் வாழ்ந்த புகார் எனது ஊர்.
3. எனது சிலம்பை விற்க முயன்று உன்னால் கொல்லப்பட்டான் கோவலன்.
4. அவன் மனைவி நான். என் பெயர் கண்ணகி

**2. கண்ணகிக்கும், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக.**

மன்னன் : நீ யார்?

கண்ணகி : புறாவிற்காக தன் தசையைக் கொடுத்த சிபி. நீதி கேட்ட பசுவிற்காக தன் மகனை தேர்க்காலில் இட்ட மனுநீதி புகழ் மிக்க வணிகன் மாசாத்துவன் ஆகியோர் வாழும் புகார் என் ஊர். சிலம்பை விற்க முயன்று உன்னால் கொல்லப்பட்டான் கோவலன். அவன் மனைவி . கண்ணகி என் பெயர்..

மன்னன் : கள்வனைக் கொல்வது அரசநீதி

கண்ணகி : என் சிலம்பு மாணிக்கப் பரல்கள் உடையது.

மன்னன் : என் சிலம்பு முத்துப்பரல்கள் உடையது. 9

(சிலம்பை உடைத்தாள் கண்ணகி)

நானே கள்வன். என் வாழ்நாள் அழியட்டும்.

**உரைநடை நெடுவினா**

**1. தொழில் கல்வி, தொழில்நுட்பக் கல்வி குறித்து எழுதுக.**

<u>தொழில் கல்வி</u>

1. மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம்
2. 12ம் வகுப்பு தேர்ச்சி அடைந்தால் இக்கல்வி பெறலாம்.
3. சுற்றுச் சூழல், வேளாண்மை, வேதியியல், விலங்கியல் - சிறந்த வேலை வாய்ப்புத் துறைகள்.

<u>தொழில் நுட்பக் கல்வி</u>

1. 10ம் வகுப்பு தேர்ச்சி அடைந்தால் இக்கல்வி பெறலாம்.
2. 12ம் வகுப்பு தேர்ச்சி அடைந்தால் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெறலாம்.

பகுதி: 2 2+2+6=10

**மனப்பாடச்செய்யுள் (முழுவதும்) பயிற்சி அளிக்கவும்**

## நிலை - 2

## கூடுதல் திறனுடைய மாணவர்களுக்கான பகுதி

### பகுதி - 1

II. கூவா முன்னம் இளையோன் குறுகிநீ
ஆவான் யார்என அன்பின் இறைஞ்சினான் - இப்பாடல் அடிகளில் அமைந்துள்ள நயம்.
**அ) எதுகை** ஆ) இயைபு இ) முரண் ஈ) அணி

III. சேக்கிழார் பெருமான் அருளியது
அ) சிவபுராணம் **ஆ) பெரிய புராணம்** இ) தலபுராணம் ஈ) நளவெண்பா

IV. இளங்கோவடிகள் __________ நாட்டைச் சேர்ந்தவர்
அ) சோழ நாடு **ஆ) சேர நாடு** இ) பாண்டிய நாடு ஈ) நடு நாடு

V. திறனறிந்து தேர்ந்து கொள்ள கூடியவர்
அ) அன்புள்ள பெற்றோர் ஆ) ஆர்வமுள்ள நண்பர்
**இ) மூத்த அறிவுடையோர்** ஈ) இனிய உறவினர்

VI. கணிமேதாவியாரின் காலம்
**அ)கடைச் சங்ககாலம்** ஆ) சங்கம் மருவிய காலம் இ)இடைக்காலம்

### பகுதி - 2

1. பாடற் கலிங்கமழித் தாயிர மானை கொன்ற பாடற் கரிய பரணியும் - இப்பாடல். அடிகளில் குறிப்பிடப்படும் பரணி நூல் **கலிங்கத்துப் பரணி.**
2. குடும்ப விளக்கு **பாரதிதாசன்** படைத்த குறுங் காவியங்களுள் ஒன்று.
3. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் **சீதக்காதி.**
4. பணை என்னும் சொல்லின் பொருள் **மூங்கில்.**
5. கைகேயி தன் தோழி **மந்தரை** ஆவாள்.
6. நற்றிணை ஒன்பதடி சிற்றெல்லையும் **பன்னிரெண்டு** அடி பேரெல்லையும் கொண்ட நூல்.
7. கண்ணகனார் **கோப்பெருஞ்சோழனின்** அவைக்களப்புலவர்களுள் ஒருவர்.
8. திருநாவுக்கரசரின் தமக்கையார் **திலகவதியார்** ஆவார்.
9. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் **திருவாதவூர்**
10. மாணிக்கவாசகர் **அரிமர்த்தன பாண்டிய** மன்னரிடம் தலைமை அமைச்சராகப் பணியாற்றினார்.
11. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தந்தத்தில் **திருவாய்மொழி** குலசேகரர் பாடியதாகும்.
12. இராமலிங்கர் தமிழ்மொழியே **இறவாத நிலை** தரும் என்று கருதினார்.
13. நாள்தோறும் கல்வியில் **புதுப்புது துறைகள்** உண்டாகிக் கொண்டிருக்கின்றன.
14. காவலர், இராணுவம் போன்ற பணிகளுக்கு உடற்கூறு தேர்வும், **எழுத்துத்** தேர்வும் உண்டு.

### பகுதி – 3.

**பொருத்துக.**

1.

| **சொல்** | | **பொருள்** |
|---|---|---|
| 1. மேதி | - | எருமை |
| 2. சந்தம் | - | அழகு |
| 3. கோதில் | - | குற்றம் இல்லாத |
| 4. அங்கணர் | - | சிவன் |

2.

| **சொல்** | | **பொருள்** |
|---|---|---|
| 1. செறு | - | வயல் |
| 2. வித்து | - | விதை |
| 3. யாணர் | - | புதுவருவாய் |
| 4. வட்டி | - | பனையோலைப் பெட்டி |

3.

| **சொல்** | | **பொருள்** |
|---|---|---|
| 1. கான் | - | காடு |
| 2. உழுவை | - | புலி |
| 3. மடங்கல் | - | சிங்கம் |
| 4. எண்கு | - | கரடி |

4. **இளமைப் பெயர்களைப் பொருத்துக**

ஆடு -- குட்டி
சிங்கம் -- குருளை

## பகுதி – 4

**விடைக்கு ஏற்ற வினா அமைக்கவும்.**

1. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி, ஒலிப்படக் கருவி பயன்படுகிறது?
   **திரையரங்குகளில் திரைப்படம் காட்ட எக்கருவி பயன்படுகிறது?**
2. திரைப்படம் எடுப்பதைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.
   **திரைப்படம் எடுப்பதைவிடச் எப்படம் எடுப்பது கடினமான பணியாகும்?**
3. நடிப்புக்கலையையும், அரசியலையும் தன் இரு கண்களாக எம்.ஜீ.இராமச்சந்திரன் கருதினார்.
   **எம்.ஜி.இராமச்சந்திரன் தன் இரு கண்களாக் எவற்றைக் கருதினார்?**
4. இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைத்தல் வேண்டும்.
   **இளைஞர்களின் உள்ளத்தில் எவை வளரும் வகையில் கல்வி அமைத்தல் வேண்டும்?**
5. இளங்கலைப்பட்டம் பெற்றவர்கள், இளங்கலை கல்வியில் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.
   **இளங்கலைப்பட்டம் பெற்றவர்கள், இளங்கலை கல்வியில் பட்டம் பெற்றிருந்தால் எப்பணியில் சேரலாம்?**

## பிரிவு – 2

## பகுதி – 1

செய்யுள் குறு வினாக்கள்.

**23. ஒழுக்கத்தினால் எய்துவது எது? இழுக்கத்தினால் எய்துவது எது?**
- நல்லொழுக்கத்தால் மேன்மை அடைவர்.
- தீய ஒழுக்கத்தால் பெரும் பழியை அடைவர்.

**24. பல கற்றும் கல்லார் அறிவிலார் - யார்?**
- சான்றோர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடவாத கற்றவர் கல்லாதவரே ஆவார்.

**25. ஊக்கம் உடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது?**
- ஆட்டுக்கிடா பகைவரைத் தாக்குவதற்குப் பின் வாங்குவது போன்றது

**26. செய்வதற்கரிய செயல் செய்வது எப்போது?**
- தம்மால் அடைவதற்கு அருமையான காலம் கிடைக்கும் பொழுது செய்தல் வேண்டும்.

**27. குகன் இலக்குவனிடம் யாது கூறினான்?**
- நான் படகோட்டும் வேட்டுவன்.
- நாய் போல் தொண்டு செய்வேன் என்று கூறினான்.

**28. அன்புள்ள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம் - யார் யாரிடம் கூறியது?**
- இராமபிரான் குகனிடம் கூறியது.

**29. சிலம்பு உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை?**
- அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றமாகும்.
- உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்.
- ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்

**30. திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் கூறியது என்ன?**
- திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் நீர் வைத்துள்ள தண்ணீர்ப் பந்தலில் உள்ள எல்லாப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் என பெயர் வைத்துள்ளமைக்கு என்ன காரணம்? எனக் கேட்டார்.

**31. வன்மையுள் எல்லாம் தலை-எது?**
- அறிவிற் சிறந்த பெரியோரை உறவினராய் ஏற்று நடத்தல்

**32. செற்றார் செயக்கிடந்ததில்லை- யாருக்கு?**
- அறிவிற் சிறந்த பெரியோரை சார்ந்து நடக்கவல்லாருக்கும் பகைவர் செய்யக்கூடிய தீங்கு யாதொன்றும் இல்லை

**33. நல்லார் தொடர்பை கைவிடல் எத்தகையது?**
- பலரோடு பகைத்துக் கொள்வதை விட பன்மடங்கு தீமை தரும்

**34. தேவாரம் - பொருள் கூறு?**
- தே + வாரம் - தெய்வத்தன்மையுடைய இசைப்பாடல்கள்
- தே + ஆரம் - தெய்வத்திற்குச் சூட்டப்படும் பாமாலை

**35. நந்திவர்மன் வீரம் எத்தகையது?**
- நந்திவர்மனை எதிர்த்த அறிவற்ற மன்னர் போரில் தம் உயிரை இழந்து தேவர் உலகத்தை ஆள்வர்

**36. குலசேகரர் எவ்வெவ் மொழிகளில் வல்லவர்?**
- வடமொழி, தென்மொழி

## உரைநடை

1. **அமெரிக்க இதழாசிரியர் காந்தியடிகள் பற்றிக் கூறியது யாது?**
   - ‘‘சத்திய சோதனையில் தான் உலகம் உய்ய உற்றவழி இருக்கிறது’’ என்பதாம்.
2. **காந்தியடிகள் எதனைப்பாவம் என்கிறார்?**
   - ‘‘பகட்டான வாழ்க்கையைப் பாவம்’’ என்கிறார் காந்தியடிகள்
3. **காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத்திய பாடலின் கருத்து யாது?**
   - ‘‘தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை,தீமை செய்தவருக்கும் நன்மையே செய். உண்மைப் பொருண்மை உண்டு’’ என்னும் இப்பாடல் இன்னா செய்யாமை என்னும் கருத்தை அவருள் விதைத்தது.
4. **இயேசுவின் மலைப் பொழிவு நூலைப் படித்து காந்தியடிகள் உணர்ந்தது என்ன?**
   - ‘‘தீயவனை எதிர்க்காதே; அவனிடமுள்ள தீமையை எதிர்த்து நில், பகைவனிடமும் அன்பு பாராட்டு’’ என்பதாகும்
5. **காந்தியடிகளுக்கு இளம் பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர் பண்புகள் யாவை?**
   - அன்பு, உண்மை, உறுதி, இன்னா செய்யாமை என்பனவாகும்
6. **எவற்றை அறநெறியாகப் போற்ற வேண்டும் என காந்தியடிகள் கூறினார்?**
   - எளிமையையும்,சிக்கனமும் அறநெறியாகப் போற்ற வேண்டும் என காந்தியடிகள் கூறினார்
7. **இராமலிங்கர் எங்கு எப்போது பிறந்தார்?**
   - மருதூர், 05.10.1823
8. **ஒவ்வொருவரும் குறைந்தது எக் கல்வித் தகுதியினைப் பெறுதல் வேண்டும்?**
   - மேல்நிலை கல்வித் தகுதியினைப் பெறுதல் வேண்டும்
9. **அம்பேத்கருக்கு ‘பீம்’ எனப் பெயர் வைக்கக் காரணம் என்ன?**
   . அம்பேத்கரின் இயற்பெயர் பீமாராவ் ராம்ஜி மகாபாரதப் பீமனைப் போல் வீரனாக வரவேண்டும் என்ற எண்ணத்தில் ‘பீம்’ எனப் பெயர் சூட்டினார் தந்தை இராம்ஜி சக்பால்.
10. **பீமாராவ் ராம்ஜி தன் பெயரை அம்பேத்கர் என மாற்றிக் கொள்ள காரணம் யாது?**
    உயரிய நோக்குடன் செயல்பட்டவர் பீமாராவின் ஆசிரியர் அம்பேத்கர் காலத்தினால் செய்த உதவியை ஞாலத்தினும் பெரிதெனக் கருதிய பீமாராவ் ராம்ஜி அவ்வாசிரியர் பெயரையே தன் பெயரோடு இணைத்துக் கொண்டார்.
11. **பேச்சின் முக்கூறுகள் யாவை?**

    **எடுத்தல், தொடுத்தல், முடித்தல்.**

## பகுதி – 2.

1. **பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.**
   பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்தல், உணர்ச்சியைத் தூண்டும் வகையில் முடித்தல், கவிதையைக் கூறி முடித்தல், பாராட்டி முடித்தல்.
2. **தமிழர் இசைக் கலையில் மேம்பட்டிருந்தனர் என்பதை நிறுவுக**
   **(இது நெடு வினாவாயினும் மாதிரி வினாத்தாளில் சிறுவினா பட்டியலில் இடம் பெற்றுள்ளது)**
   சங்க இலக்கியமும், சிலப்பதிகாரமும் இசையைப் பற்றிக் கூறுகின்றன. நரம்பின் மறை என்னும் நூலை தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். பாணன் பாடினி போன்ற கலைஞர்கள் இருந்தனர். கர்நாடக இசைக்குத் தாய், தமிழிசையே.

3. **பட்டதாரி ஆசிரியர் பணிக்குரிய கல்வித் தகுதிகள் குறித்து எழுதுக.**
மேல்நிலை வகுப்பு முடிந்ததும் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற வேண்டும்.

## பகுதி – 3
## நெடுவினாக்கள்.

1. **பெரியோரைத் துணைக்கோடல்**
   1. அறநெறி அறிந்தோா் நட்பினைக் கொள்ளுதல் வேண்டும்.
   2. துன்பம் வராமல் காப்பவரை நட்பாக்கிக் கொள்ள வேண்டும்.
   3. தீயனவற்றைக் கண்டால் இடித்துத் திருத்துபவரின் உறவைப் பெற வேண்டும்.
   4. நல்லவா் நட்பைக் கைவிடுதல் பலரை பகைப்பதற்கு ஒப்பாகும்.

2. **ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**
   1. ஒழுக்கம் உயிரைவிட மேலானது.
   2. எல்லாச் சிறப்புகளையும் தருவது.
   3. ஒழுக்கம் உடையவரே உயர்ந்த குடியினர்.
   4. ஒழுக்கம் இல்லாதவரிடம் உயர்வு இருக்காது.
   5. நல்லொழுக்கம் நன்மையை விளைவிக்கும்
   6. தீய ஒழுக்கம் தீமையை விளைவிக்கும்.

3. **காலம் அறிதலை வள்ளுவர் வழிநின்று விளக்குக**
   1. பகலில் கூகையை காக்கை வெல்லும். அதுபோல் பகைவரை காலமறிந்து வெல்ல வேண்டும்.
   2. காலமறிந்து செயல் செய்வதே செல்வத்தைக் கட்டும் கயிறாகும்.
   3. காலத்தையும் இடத்தையும் அறிந்து செயல்பட்டால் உலகத்தையே வெல்லலாம்.
   4. வாய்ப்பற்ற காலத்தில் கொக்கைப் போல காத்திருக்க வேணண்டும்
   5. உரிய காலத்தில் கொக்கைப் போல செயல் முடிக்க வேண்டும்.

4. **பெண்கள் முன்னேற்றம் பற்றி தந்தை பெரியார் கூறுவன யாவை?**
   1.பெண்கல்வி சமூக வளர்ச்சிக்கு மிகவும் முக்கியம்
   2.பெண்களுக்கு சிறந்த கல்வியைக் கொடுக்க வேண்டும்
   3.பெண்களைப் பகுத்தறிவு இல்லாமல் வைப்பது தவறு
   4.கணவனுக்கு மட்டும் உழைக்கும் அடிமையாகப் பெண்கள் இருக்கக் கூடாது
   5.பெண்கள் சமூத் தொண்டு செய்ய வேண்டும்
   6.மணக்கொடை ஒரு பெரிய நோய் இளைஞர்கள் அதை ஒழிக்க வேண்டும்.

5. **அம்பேத்கரின் அரும்பணிகள் குறித்து எழுது.**
   1.அம்பேத்கர் சாதி இல்லாத இந்தியாவை அமைக்க விரும்பினார்.
   2.எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும்
   3.ஏழைகளுக்காக பணம் வாங்காமல் வாதாடினார். 13
   4.அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கினார்.
   5.சட்ட வரைவு குழுத் தலைவராக பணியாற்றினார்.

6. **மேடைப் பேச்சு பற்றி எழுதுக**
   1.மேடைப் பேச்சுக்கு உயிர் நாடி கருத்து ஆகும்
   2.இனிமையாகவும் எளிமையாகவும் பேச வேண்டும்.
   3.எடுத்தல் தொடுத்தல் முடித்தல் ஆகிய மூன்று கூறுகளும் சிறப்பாக அமைய வேண்டும்.
   4.எடுத்தல் சுருக்கமாக இருக்க வேண்டும்
   5.தொடுத்தல் மலர்மாலை போல அமைய வேண்டும்
   6.சுருங்கக் கூறி சிறப்பாக முடித்தல் வேண்டும்.

7. **செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகள் யாவை?**
   1 .உலகம் தோன்றிய போதே, தோன்றியது தமிழ்.
   2. பிற மொழி துணையின்றி இயங்கும்.
   3. திராவிட மொழிகளின் தாய்.
   4. இது இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் சிறப்புகளைக் கொண்டது.
   5. உயா் சிந்தனை : **யாதும் ஊரே யாவரும் கேளிர்**
   **பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்**

# தமிழ் இரண்டாம் தாள்.

**பிரிவு – I (மதிப்பெண்கள்: 20.)**

**பகுதி – 1**

## உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. உயிரளபெடை ………. வகைப்படும்
   அ). இரண்டு ஆ) **மூன்று** இ) நான்கு ஈ) ஏழு
2. வினைத்தொகை பயின்று வந்துள்ள தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக
   அ). பணிந்து ஆ) **நீள்கழல்**. இ) இருத்தி ஈ) தழீஇய
3. பண்புத்தொகை பயின்று வந்துள்ள தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக
   அ). குலக் கொடி. ஆ)**கருங்குதிரை**. இ) தடக்கை ஈ) வாழ்தல்
4. உவமைத் தொகை பயின்று வந்துள்ள தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக
   அ). செந்தமிழ். ஆ) பாலுந்தேனும். இ) **தேன் தமிழ்** ஈ) மாநகர்.
5. கீழ் வருவனவற்றுள் தொடர் மொழி எது?
   அ). **அந்தமான்** ஆ) மண். இ) படம் பார்த்தான். ஈ) வைகை.
6. பெயரெச்சத் தொடரைத் தேர்ந்து எழுது
   அ).சென்று கேட்டான். ஆ)**படித்த** பாடம். இ)ஆடினன். ஈ)வந்து வந்து
7. பாலை நிலத்திற்கு உரிய பறவைகள்
   அ). கிளி மயில்.ஆ) நாரை அன்னம். இ) **புறா பருந்து**. ஈ)கடற்காகம் கிளி
8. இனங்குறித்தலை உணர்த்தும் தொடர் எது?
   அ). விருப்பு வெறுப்பின்றி வாழ்ந்தான். ஆ) பச்சைப் பசேல் என்ற வயல்.
   இ) இரவுபகல் பாராது உழைத்தான். ஈ)கதிர் வேல் **வெற்றிலை தின்றான்.**
9. நல்லவை ………. எனப் பிரியும்.
   அ). நேர் நேர். ஆ) நிரை நேர். இ) **நேர் நிரை**. ஈ) நிரை நிரை.

9 உம்மைத் தொகையைத் தேர்ந்தெடுத்து எழுதுக
   அ). **கபிலபரணர்.** இ) தேனும் மீனும் இ) சூழ்கழல். ஈ) நீர்த் தடம்.

10 வௌவால் இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம்
   அ). ஐகாரக் குறுக்கம் ஆ) மகரக் குறுக்கம் இ) **ஔகாரக் குறுக்கம்**
   ஈ) ஆய்தக் குறுக்கம்.

11. எது இறந்த கால வினை முற்று?
    அ). வருகிறான். ஆ) வருவான் **இ) வந்தான்** ஈ) வருகின்றான்.
12. அன்மொழித் தொகையைத் தேர்ந்து எழுதுக
    அ). நற்கறிகள் **ஆ) அங்கணர்** இ) நீரலை ஈ) நான்மறை
13. பின்வரும் தொடரில் எது ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
    அ). செய்க ஆ) சூடு **இ) ஏமரா** ஈ) செய்து
14. ‘தலைவன்’ இச்சொல்லில் பயின்றுவரும் குறுக்கம்.
    அ). ஔகாரக் குறுக்கம் **ஆ) ஐகாரக் குறுக்கம்** இ) ஆய்தக் குறுக்கம்
    ஈ) மகரக் குறுக்கம்
15. கீழ்க்காணும் சொற்களில் எது வியங்கோள் வினைமுற்று
    அ). செய்து ஆ) சூடு இ) ஏமரா **ஈ) செய்க**
16. போன்ம்’ இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம்
    **அ). மகரக்குறுக்கம்.** ஆ) ஐகாரக் குறுக்கம
    இ) ஔகாரக் குறுக்கம் ஈ) ஆய்தக் குறுக்கம்.
17. ஒன்றன்பால் வினைமுற்றைத் தேர்க
    அ). நின்றான் ஆ) நின்றனர். **இ) நின்றது** ஈ) நின்றாள்.
18. பின் வருவனவற்றுள் எது தொழிற்பெயர் எனத் தேர்க
    அ). செய்து **ஆ) செய்தல்** இ) ஏமரா ஈ) செய்க.
19. உரிச்சொல் தொடர் எது எனத் தேர்க
    **அ). நனிச்சிறப்பு** ஆ) வாகை சூடி. இ) படம் வரை ஈ) செய்தொழில்
20. பின் வருவனவற்றுள் இரட்டைக் கிளவி எது எனத் தேர்க
    அ). நன்று நன்று **ஆ) கலகல** இ) வரச்செய் ஈ) செய்க
21. வினையெச்சம் எது எனத் தேர்க
    அ). செய்க **ஆ) சென்று** இ) ஏமரா ஈ) சென்ற
22. பல் + தீது எவ்வாறு புணரும்?
    **அ). ப∴றீது** ஆ) ப∴டீது இ) பல்றீது ஈ) பற்றீது.

23 ஐவர் போருக்குச் சென்றனர் இத்தொடர் குறிக்கும் பாலினம்.
அ). பெண்பால் **ஆ) ஆண்பால்** இ) பலர்பால் ஈ) ஒன்றன்பால்.

24. ஓரெழுத்து ஒரு மொழியைத் தேர்ந்து எழுதுக
**அ). பா** ஆ) கொள் இ) ப. ஈ) ந

25. எதிர்கால இடைநிலை அமைந்துள்ள வினைமுற்றைத் தேர்ந்து எழுதுக
அ). படித்தான். ஆ) படிக்கிறான். **இ) படிப்பான்.** ஈ) படிக்கின்றான்.

26. படித்து வந்தான் என்பது
**அ).வினையெச்ச வினை.** ஆ)பெயரெச்ச வினை. இ)முற்றெச்சம் ஈ)குறிப்பு.

27. தனி மொழியைத் தேர்ந்து எடுத்து எழுதுக
அ). அந்தமான் **ஆ) மனிதன்.** இ) பலகை ஈ) கற்றூண்.

28. மாடு கன்றை ஈன்றது இத்தொடரில் மாடு என்பது …….. ஐ குறிக்கும்.
அ). பொதுச்சொல் ஆ) பெயர்ச் சொல். **இ) ஒன்றொழி பொது சொல்.**
ஈ) அ.்.றிணை பொது பெயர்.

29. தெற்கு + கிழக்கு எவ்வகைப் புணர்ச்சி எனக் கூறுக
அ). பண்புப் புணர்ச்சி **ஆ) திசைச் புணர்ச்சி.** இ) குற்றியலுகரப் புணர்ச்சி
ஈ) உயிரீற்றுப் புணர்ச்சி.

30. இராமன் மகன் இத்தொடர் எவ்வகை வேற்றுமையை உணர்த்தும்.
**அ).நான்காம் வேற்றுமை** ஆ) இரண்டாம் வேற்றுமை.
இ) எழுவாய்த் தொடர். ஈ) ஐந்தாம் வேற்றுமை.

31. செய்யேன் என்பது …….. விடையாகும்.
அ). சுட்டு விடை ஆ) நேர் விடை. **இ)எதிர்மறை விடை** ஈ) இனமொழி

32. **படித்த** பாடம்' இச்சொல் காட்டும் எச்சம்
அ). வினையெச்ச வினை **ஆ) பெயரெச்ச வினை** இ) குறிப்பு வினை
ஈ) வியங்கோள் வினை.

33. செய்யுள் உறுப்புகள் ……… வகைப்படும்.
அ). நான்கு வகைப்படும் ஆ)மூன்று வகைப்படும் **இ)ஆறு வகைப்படும்.**
ஈ) இரண்டு வகைப்படும்.

34. ஆசிரியப் பா --------- வகைப்படும்.
அ). ஆறு. ஆ) மூன்று **இ) நான்கு** ஈ) இரண்டு

35. மொழி -------- வகைப்படும்.
அ). ஆறு. **ஆ) மூன்று** இ) நான்கு ஈ) இரண்டு

## பகுதி: 2

**கோடிட்ட இடங்களை நிறைவு செய்க**

**36.** 'வௌவால்' இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் ***ஔகாரக் குறுக்கம்***
37. கிளி போல பேசினான் இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு ***போல***
38. மாலை என்பது **முல்லைத்** திணைக்குரிய சிறுபொழுது.
39. ஆடத் தெரியுமா? என்னும் வினாவிற்கு பாடவும் தெரியும் என விடை கூறுவது **இனமொழி**
40. மரவடி' இச்சொல்லில் அமைந்துள்ள புணர்ச்சி **மகர ஈற்றுப் புணர்ச்சி**
41. மரவேர் என்பது **கெடுதல்.** விகாரம் ஆகும்.
42. 'வேய்புரை தோள்' இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு புரை
43. பாலைத் திணைக்கு உரிய சிறு பொழுது …***நண்பகல்***………
44. ஆடுவாயா? என்னும் வினாவிற்கு கால் வலிக்கும் என்பது ***உறுவது கூறல் விடை***
45. மொழியமிழ்து என்பதன் இலக்கணக் குறிப்பு **இருபெயரொட்டுப் பண்புத்தொகை**
46. புறத்திணைகள் …**12**. வகைப்படும்.
47. நிரை கவர்தல் என்பது ***வெட்சித்*** திணை ஆகும்.
48. மண்ணாசை கருதி போருக்குச் செல்வது **…*வஞ்சித்*** திணையாகும்.
49. பொருள் இலக்கணம் …**2……** வகைப்படும்.
50. அகத்திணை **7.** வகைப்படும்.

51. வெண்பாவின் ஓசை **செப்பலோசை**. ஆகும்.
52. ஆசிரியப்பாவின் ஓசை **அகவலோசை**. ஆகும்.
53. இளவழகன் வந்தான் இது …**எழுவாய்த்தொடர்** தொடர்.
54. வயலும் வயல் சார்ந்த இடமும் **மருதத்** திணை
55. மீமிசை என்பது **ஒருபொருட்பன் மொழி** ஆகும்.

56. பா' **நான்கு**. வகைப்படும்.
57. வளையல்' இச்சொல்லில் ஐகாரம் …**ஒரு** மாத்திரை அளவு குறைந்து ஒலிக்கிறது.
58. வழு 7 வகைப்படும்.
59. ஆறு பெரும் பொழுதுகளுக்கும் உரிய திணை **மருதமும் நெய்தலும்.** ஆகும்.
60. நன்னூல் கிடைக்குமா? என கடைக்காரரிடம் கேட்கப்படும் வினா **கொளல் வினா**.
61. மாடு' என்னும் சொல் **அ.:றிணை பொதுப் பெயராகும்.**
62. 'மாடு கன்றை ஈன்றது' என்னும் தொடரில்
   'மாடு' என்பது **ஒன்றொழி பொது சொல்**. சொல்லாகும்.
63. ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளைத் தருவது …**தனி. மொழி** ஆகும்.
64. தொழிலைக் குறிக்கும் சொல் **வினைச் சொல்** ஆகும்.
65. ஒரு எச்ச வினை **பெயரைக்** கொண்டு முடிந்தால் பெயரெச்ச வினையாகும்.

## பகுதி: 3

### 1. சுருக்கமாக விடையளிக்க

1. வல்லினம் மிகும் இடம்
   ஒரெழுத்து ஒரு மொழியில் மிகும்
   **தீ+சட்டி = தீச்சட்டி**
   தை+தேர் = தைத்தேர்
2. அந்த இந்த சொற்களுக்குப்பின் மிகும்
   அந்த+பேனா = அந்தப்பேனா
   **இந்த+புத்தகம் = இந்தப்புத்தகம்**
3. வல்லினம் மிகா இடம்
   இரட்டை கிளவியில் மிகாது
   கட கட: சல சல

### 2. கொடுக்கப்பட்ட சொல்லை வினையெச்சமாக்குக

1. பெறு-இச்சொல்லை வினையெச்சமாக்கு **பெற்று**
2. பசி-இச்சொல்லை வினையெச்சமாக்கு **பசித்து**
3. பறி-இச்சொல்லை வினையெச்சமாக்கு **பறித்து**
4. வந்தான்- இச்சொல்லை வினையெச்சமாக்கு **வந்து**

### 3. சந்திப் பிழைநீக்கி எழுதுக.

1. ஆளும் அறிவும் வளரும் முன்பாக வாழ்க்கை பயணமாம்.
   விடை : ஆளும் அறிவும் வளரும் முன்பாக வாழ்க்கை**ப்** பயணமாம்.
2. ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்.
   விடை : ஏழைகளுக்கு**ப்** பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று**த்** தந்தார்.
3. மேடை பேச்சு மிகுந்த பயனை தரவல்லது
   விடை : மேடை**ப்** பேச்சு மிகுந்த பயனை**த்** தரவல்லது.
4. மக்களை இலட்சிய பார்வையிலே அழைத்து செல்லும் வன்மையுடையதே மேடை பேச்சு
   விடை : மக்களை இலட்சிய**ப்** பார்வையிலே அழைத்து**ச்** செல்லும் வன்மையுடையதே மேடை**ப்** பேச்சு.
5. திரைபடம் எடுக்கப்படும் படசுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
   விடை : திரை**ப்**படம் எடுக்கப்படும் பட**ச்**சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
6. வள்ளலார் அருளிய வழிகளை கடைப்பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.
   விடை : வள்ளலார் அருளிய வழிகளை**க்** கடைப்பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.
7. கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்.
   விடை : கைத்தொழில் ஒன்றை**க்** கற்றுக்கொள்.

### 4. வழுவுச் சொற்களைத் திருத்தி எழுதுக

1. வலது பக்கச் சுவற்றில் எழுதாதே.
   விடை : வலப் பக்கச் **சுவரில்** எழுதாதே.
2. இடதுபக்கமாகச் செல்.
   விடை : **இடப்பக்கமாகச்** செல்.
3. புஞ்சையும் நஞ்சையும் பூத்துக் குலுங்கின.
   விடை : **புன்செய்யும் நன்செய்யும்** பூத்துக் குலுங்கின.

**5. பொருத்தமான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.**

1. தமிழர்கள் நிலத்தைக் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை எனப் ஐவகையாகப் பிரித்தார்கள்.

**விடை** : தமிழர்கள் நிலத்தை ‘குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை’ எனப் ஐவகையாகப் பிரித்தார்கள்.

2. கதைப்படங்கள் மட்டுமின்றி கருத்துப்படங்கள் செய்திப்படங்கள் விளக்கப்படங்கள் கல்விப்படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.

**விடை** : கதைப்படங்கள் மட்டுமின்றி ‘கருத்துப்படங்கள், செய்திப்படங்கள், விளக்கப்படங்கள், கல்விப்படங்கள்’ எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.

3. சங்க படைப்புகள்வெறுங்கற்பனைப் படைப்புகளல்ல அவை மனிதப் பட்டறிவின் முழுவெளிப்பாடுகள் அறிவுடன் பொருந்தி வருவன அறத்தொடுநிலையாய் நிற்பன.

**விடை** : சங்க படைப்புகள் வெறுங்கற்பனைப் படைப்புகளல்ல. அவை மனிதப் பட்டறிவின் முழுவெளிப்பாடுகள்; அறிவுடன் பொருந்தி வருவன; அறத்தொடுநிலையாய் நிற்பன.

4. பழந்தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள் நன்மதிப்புப் பெற்றிருந்தார்கள் புலவராய் பாடினியாய் விறலியாய்த் திகழ்ந்தனர்.

**விடை** : பழந்தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள் நன்மதிப்புப் பெற்றிருந்தார்கள்; புலவராய், பாடினியாய், விறலியாய்த் திகழ்ந்தனர்.

5. சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்க்கை வாழ்வோம்

**விடை** : சட்டத்தை மதிப்போம்; குற்றம் களைந்த வாழ்க்கை வாழ்வோம்.

6. தமிழ்மொழி சிந்தனைக் கருவூலமாய் திகழ்வது அறிவுச் சுரங்கமாய் இலங்குவது

**விடை** : தமிழ்மொழி சிந்தனைக் கருவூலமாய் திகழ்ந்தது. அறிவுச் சுரங்கமாய் இலங்குவது.

7. மூன்றும் பச்சைக் குட்டிகள் வெளியே விட்டால் செத்துப் போகும் யாராவது எடுத்துக் கொண்டு போனாலும் வளர்க்க முடியாது என்றாள்

**விடை** : “மூன்றும் பச்சைக் குட்டிகள்; வெளியே விட்டால் செத்துப் போகும்; யாராவது எடுத்துக் கொண்டு போனாலும் வளர்க்க முடியாது” என்றாள்.

8. தொலைக்காட்சி குளிரூட்டும் கருவி கைபேசி கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன

**விடை** : தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, கைபேசி, கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன.

**கீழ்க் காணும் மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.**

1. பாரதி தாசன் தமிழிலக்கிய வானில் கொடிகட்டிப் பறந்தார்.
   விடை : **(கொடிகட்டிப் பறத்தல் – தனிப்புகழுடன் விளங்குதல்)**
2. திருடன் காவலரிடம் நான் திருடவில்லை என முதலைக் கண்ணீர் வடித்தான்.
   விடை : (முதலைக் கண்ணீர் -- **பொய் அழுகை**)
3. .மக்களிடம் பணத்தை வசூலித்த செல்வம் கம்பி நீட்டினான்.
   விடை : (கம்பி நீட்டுதல் **– சொல்லிக் கொள்ளாமல் செல்லுதல்)**

## பொருள் அறிந்து எழுதுக

1. ஏட்டுச் சுரக்காய் -- பட்டறிவு இல்லாத படிப்பறிவு
2.. கானல நீர் -- இருப்பது போலத் தோன்றும் ஆனால் இராதது
3. கொட்டியளத்தல் -- மிகுதியாகப் பேசுதல்
4. ஆகாயத் தாமரை -- இல்லாத ஒன்று
5. வாழையடி வாழை -- பரம்பரை பரம்பரையாக

**4. தொகைச் சொற்களை அறிந்து எழுதுக.**

1. முக்கனி : மா,பலா,வாழை
2. மூவிடம் : தன்மை,முன்னிலை,படர்க்கை
3. முப்பால் : அறம்,பொருள்,இன்பம்
4. இருவினை : நல்வினை,தீவினை
5. இருதிணை : உயர்திணை,அஃறிணை
6. நாற்றிசை : கிழக்கு,மேற்கு,வடக்கு,தெற்கு
7. நானிலம் : குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்
8. நாற்குணம் : அச்சம், பயிர்ப்பு, மடமை, நாணம்
8. ஐம்பால் : ஆண்பால்,பெண்பால்,பலர்பால்,ஒன்றன்பால்,பலவின்பால்
**9.** ஐந்திணை : குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்,பாலை

## பிரிவு: -- II

## பகுதி – 1 (மதிப்பெண்கள் : 10 )

**1. செல்வான் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

செல் -- பகுதி
வ் -- எதிர்கால இடைநிலை
ஆன் -- விகுதி

**2. அறிந்து பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அறி -- பகுதி
ந்(த்) -- சந்தி (த்-ந் ஆனது விகாரம்)
த் -- இறந்த கால இடைநிலை
உ -- விகுதி

**3. ஔகாரக் குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

- சொல்லின் முதலில் மட்டுமே வரும்
- ஒன்றரை மாத்திரை அளவாக குறைந்து ஒலிக்கும்

(எ.கா) – ஔவை,வௌவால்

**4. முல்லைக்குரிய கருப் பொருள்கள் யாவை?**

தெய்வம் -- திருமால்
விலங்கு -- முயல்,மான்,புலி
யாழ் -- முல்லை யாழ்
பண் -- முல்லைப்பண்

**5. ஒரு பொருட்பன்மொழியைச் சான்றுடன் விளக்குக.**

- ஒரு பொருளைக் குறித்து, தொடந்து வரும் இரு சொற்கள்

(எ.கா) உயர்ந்தோங்கி, நடு மையம்

**6. அடுக்குத் தொடர் -- இரட்டைக்கிளவிக்குரிய வேறுபாடு யாவை?**

| | |
|---|---|
| சொற்கள் தனியே நிற்கும் | -- ஒன்றுபட்டு நிற்கும் |
| பிரித்தால் பொருள் தரும் | -- பிரித்தால் பொருள் தராது |
| இரண்டு, மூன்று, நான்கு, முறை அடுக்கி வரும் | -- இரண்டு முறை மட்டுமே அடுக்கி வரும் |

**7. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

விடை எட்டுவகைப்படும்.

1. சுட்டு விடை
2. மறை விடை
3. நேர் விடை
4. ஏவல் விடை
5. வினா எதிர் வினாதல்
6. உற்றது உரைத்தல்
7. உறுவது கூறல்
8. இனமொழி

8. **வாகைத் திணையை விளக்குக.**

போரில் வெற்றி பெற்றவர் வாகைப்பூ சூடி மகிழ்வர்

9.. **அறி வினா, அறியா வினாவை விளக்குக.**

- தான் அறிந்த பொருள் பிறர்க்குத் தெரியுமா? என வினவுதல் -- அறிவினா (திருக்குறளை இயற்றியவர் யார்?)
- தான் அறியாத பொருளை அறிந்து கொள்வதற்காக வினவுதல் -- அறியாவினா எட்டுத் தொகை நூல்கள் யாவை?

10. **பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

பா நான்கு வகைப்படும்
1. வெண்பா
2. கலிப்பா
3. ஆசிரியப்பா
4. வஞ்சிப்பா

11. **மையீற்றுப் பண்பு பெயர்கள் நான்கினை கூறுக.**
    1. சிறுமை
    2. நன்மை
    3. இளமை
    4. புதுமை

12. **முற்றெச்சம் என்றால் என்ன?**

ஒரு வினை முற்று எச்சப் பொருளைத் தந்து, மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் என்படும்
(எ.கா) வந்தனள்,போயினள்

13. **மூவகை மொழிகள் (சொல்லின் வகைகள்) யாவை?**
    1. தனிமொழி
    2. தொடர்மொழி
    3. பொதுமொழி

14. **முதற்பொருள் என்பது யாது?**

**நிலமும் பொழுதும்** முதற் பொருளாகும்.

15. **புறத்திணை எத்தனை ?அவை யாவை?**

புறத்திணை **12** வகைப்படும்
வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை எனப்படும்

16. **ஆறு பெரும் பொழுதுகளும் வரும் திணைகள் யாவை**?

1. மருதம் 2. நெய்தல்.

17. திணை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

ஐந்து வகைப்படும்.
அவை 1. குறிஞ்சி 2. முல்லை 3. மருதம். 4. நெய்தல். 5. பாலை.

.

18. **பெரும்பொழுது எத்தனை வகைப்படும்**? அவை யாவை?

ஆறு வகைப் படும் அவை
1.கார்காலம் 2. குளிர் காலம் 3. முன்பனிக் காலம் 4. பின்பனிக் காலம்
5.இளவேனிற் காலம் 6. முதுவேனிற் காலம்.

19. **சிறுபொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

**சிறு பொழுதுகள் ஆறு வகைப்படும்**
**அவை :**
**1. வைகறை 2. காலை 3. நண்பகல் 4. எற்பாடு 5. மாலை 6. யாமம்.**

**20. செம்மொழி எவ்வாறு புணரும்?**

செம்மொழி = செம்மை+மொழி

செம்மொழி ஈறுபோதல் விதிப்படி'மை' கெட்டுப் புணர்ந்தது

**21. உவம உருபுகள் யாவை?**

போல, புரைய, நேர,நிகர,அன்ன,இன்ன

**22. சொல் என்றால் என்ன?**

ஒரு எழுத்து தனித்துநின்றோ? பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ? பொருள் தருவது சொல் எனப்படும்

**23. வினைச்சொல் என்றால் என்ன?**

எழுவாய் செய்யும் செயல் அல்லாத தொழிலைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்** ஆகும்.

**24. ஐகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

ஐகாரம் தன் மாத்திரையிலிருந்துகுறைந்து ஒலிப்பது ஐகாரக் குறுக்கம் எனப்படும்

ஐப்பசி - (11/2 மாத்திரை)

வளையல் - (1மாத்திரை)

மழை - (1மாத்திரை)

25. **வினா எத்தன வகைப்படும் அவை யாவை?**

**வினா ஆறு வகைப்படும்.**

**1. அறி வினா, 2. அறியா வினா, 3. ஐய வினா, 4. கொளல் வினா,**

**5. கொடை வினா. 6. ஏவல் வினா**

## பிரிவு - III

### பகுதி – 1

1. **வஞ்சப் புகழ்ச்சி அணியைச் சான்று தந்து விளக்குக.**

**அணி விளக்கம் :**

புகழ்வது போல பழித்தல், பழிப்பது போல புகழ்தல் வஞ்ச புகழ்ச்சி அணியாகும்

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்

கயவர், தேவர் என இணைந்து புகழ்ந்து, கயவர் மனம் போனவாறு தீயதைச் செய்து அழிவர் என பழித்தல்

2. **சொற்பொருள் பின்வருநிலை அணியை விளக்குக.**

**அணி விளக்கம்.**

செய்யுளில் முன்னர் வந்த சொல்லும், அதன் பொருளும் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளை தருதல்.

எ.கா:

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு
பொய்யா விளக்கே விளக்கு.

'விளக்கு' எனும் சொல் ஒளி என்னும் ஒரே பொருளை தருகிறது.

3. **தற்குறிப் பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**அணி விளக்கம் :**

இயற்கை நிகழ்ச்சியின் மீது கவிஞர் தன் கற்பனையை ஏற்றிக் கூறுதல்

(எ.கா) **'தையல் துயர்க்குத் தரியாக தம் சிறகாம்'**

- எனத் தொடங்கும பாடலில் கோழிகள் விடியற் காலையில் கூவுதல் இயல்பு, சூரியனைக் கோழி கூவி அழைப்பதாக கவிஞர் கூறியுள்ளார்.

4. **செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்**

**எஃகதனில் கூரிய தில்-** அலகிட்டு வாய்பாடு தருக

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| செய் க | நேர் நேர் | தேமா |
| பொரு ளைச் | நிரை நேர் | புளிமா |
| செறு நர் | நிரை நேர் | புளிமா |
| செருக் கறுக் கும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| எ∴ கத னில் | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| கூ ரிய | நேர் நிரை | கூவிளம் |
| தில் | நேர் | நாள் |

இச்செய்யுள் 'நாள்' என்னும் வாய்பாட்டான் நிறைவுற்றது.

5. **ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்**
**ஏனை யிரண்டும் ஒருங்கு-** அலகிட்டு வாய்பாடு தருக

| *சீர்* | *அசை* | *வாய்பாடு* |
|---|---|---|
| **ஒண் பொருள்** | நேர் நிரை நேர் | கூவிளம் |
| **காழ்ப் ப** | நேர் நேர் | தேமா |
| **இயற் றியார்க்** | நிரை நிரை | கருவிளம் |
| **கெண் பொருள்** | நேர் நிரை | கூவிளம் |
| **ஏ னை** | நேர் நேர் | தேமா |
| **யிரண் டும்** | நிரை நேர் | புளிமா |
| **ஒருங்கு-** | நிரைபு | பிறப்பு |

இச்செய்யுள் 'பிறப்பு' என்னும் வாய்பாட்டான் நிறைவுற்றது.

## பகுதி: 2

### துணைப்பாடம்

1. **மெல்ல மெல்ல மற**

**முன்னுரை**

**புகை பிடிக்கும் பழக்கத்தால் ஏற்படும் தீமைகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.**

**பொருளுரை**

**கமலநாதன் புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவன்.**
**மனைவி சொல்லியும் இவன் கேட்கவில்லை.**
**ஒருநாள் அவன் தன் உடல் நலம் இல்லாத நண்பனைப் பார்க்கச் சென்றான்.**
**அந்த நண்பனுக்கு புகை பழக்கத்தால் புற்று நோய் வந்திருந்தது.**
**அன்று இரவே அந்த நண்பன் இறந்துவிட்டான்.**
**நண்பனின் மனைவியை விதவைக் கோலத்தில் பார்த்து வருந்தினான்.**
**தன் மனைவி குழந்தைகளை எண்ணி திருந்தினான்.**
**மனைவிக்கு பூ வாங்கி வந்தான்.**

**முடிவுரை :**

**கமலநாதனைப் போல சமுதாயத்தில் அனைவரும் நல்ல மாற்றம் காண நம்மால் ஆன முயற்சியைச் செய்வோம்.**

2. **பரிதிமாற் கலைஞரின் தமிழ்த் தொண்டு**

1. ரூபாவதி, கலாவதி நாடகங்களை எழுதினார்.
2. சித்திரகவி எழுதினார்
3. ஆங்கிலம், வடமொழிப் பாடங்களைத் தமிழ்ப்படுத்தினார்.
4. நீதிநெறிவிளக்கம் - உரை எழுதினார்.
5. பட்ட வகுப்புகளில் தமிழை பாடத்திட்டத்திலிருந்து நீக்கும் முடிவை மாற்றினார்.

**3.அன்றாட வாழ்வில் சட்டம்**

1. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
நாம் வாங்கும் பொருளில் குறைபாடு இருப்பின் நீதிமன்றம் செல்லலாம். நுகர்வோர் உரிமை பாதுகாக்கப்படும்.
2. தகவல் அறியும் உரிமைச் சட்டம்
அரசியல் சட்டப்படி தகவல்கள் பெற உரிமை உண்டு. வரிப்பணம் எப்படி செலவாகிறது என அறிய உரிமை உண்டு. தனி விண்ணப்பம் இல்லை. ஏழைகள் தகவல் பெற கட்டணம் இல்லை.

**4. அண்ணாவின் கடிதம்**

1.சென்ற பொங்கல் நாளில் உன்னுடன் இருந்தேன். இன்று உயர்பதவி வழங்கிவிட்டாய்.
2.இன்னல்கள் இருப்பினும் பொங்கல் மகிழ்ச்சியான நாள்.
3.உழைப்பின் பெருமையை உணர்த்தும் நாள்.
4.எல்லாப் பொருளும் நிலமடந்தை தந்தது.
5.முயற்சி செய் என ஆணையிடுகிறேன்.

பகுதி–3

**கீழக்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.**

1) “ டாடி, வர்ற சண்டே எனக்கு பர்த்டே. பட் நீங்க இன்னும் எனக்கு பர்த்டே டிரஸ் எடுக்கவில்லையே, வொய் டாடி? என்னோட ப்ரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்கு வரச் சொல்லிக் கால் பண்ணியிருக்கிறேன்.” “சன்டே வர்றதுக்கு இன்னும் ஸிக்ஸ் டேஸ் இருக்கிறதே, டோண்ட் வொர்ரி, டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போகலாம். இப்ப உனக்கு ஹேப்பி தானே.”

**விடை:** அப்பா, வருகிற ஞாயிறு எனக்குப் பிறந்த நாள். ஆனால், நீங்க இன்னும் எனக்கு பிறந்தநாள் ஆடை எடுக்கவில்லையே, ஏன் அப்பா? என்னுடைய நண்பர்களையெல்லாம் வீட்டிற்கு வரச்சொல்லி அழைப்பு விடுத்திருக்கிறேன். ஞாயிறு வருவதற்கு இன்னும் ஆறு நாட்கள் இருக்கிறதே. கவலைப்படாதே நாளை மாலை கடைக்குப் போகலாம் இப்போது உனக்கு மகிழ்ச்சி தானே!

2) சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே? வழியிலே ஒரே டிராபிக் ஜாம்டா, அதனால்தான் லேட். சரி, சரி பஸ் எத்தனை மணிக்கு வரும்? டிக்கெட் கிடச்சுதா? பஸ் டென் தர்டிக்கு வரும் லாஸ்ட் வீக்கே ரிசர்வ் செய்தாச்சு.

**விடை:**சுரேஷ் என்ன ஆயிற்று? ஏன் தாமதமாய் வருகிறாய்? வழியில் ஒரே போக்குவரத்து நெருக்கடி அதனால்தான் தாமதம். சரி சரி பேருந்து எத்தனை மணிக்கு வரும். பயணச்சீட்டு கிடைத்ததா? பேருந்து பத்து முப்பது மணிக்கு வரும். சென்ற மாதமே முன்பதிவு செய்தாயிற்று.

3) பள்ளியிலிருந்து வீட்டிற்குள் நுழைந்த பாரி, தன் ஸ்கூல் பேக்கை தூக்கிப்போட்டு விட்டு, “மம்மி வாட்டர்” என்று குரல் கொடுத்தான். பள்ளியிலிருந்து வந்தவுடன் ஏண்டா இப்படிக் கத்துகிறாய்? கை கால்களை வாஷ் செய்து கொண்டு வா, சூடாக உனக்குப்பிடித்த டிபன் செய்து வைத்திருக்கிறேன். போய் யூனிபார்ம் மாற்றிக் கொண்டு வா என்றாள், அவன் தாய். “போம்மா” என்று கூறிக்கொண்டு பேனைச் சுழலவிட்ட பாரி, டிவியைப் போட்டான். “ஸ்கூல்விட்டு வந்தவுடன் ஏதற்கு டிவி? ஹோம்ஒர்க் செய்துவிட்டு அப்புறம் பார்க்கலாம்”, என்றாள் அவன் தாய்.

**விடை:** பள்ளியிலிருந்து வீட்டிற்குள் விரைந்து நுழைந்த பாரி தன் பள்ளிப்பையைத் தூக்கிப் போட்டு விட்டு “அம்மா” குடிநீர் என்று குரல் கொடுத்தான். பள்ளியிலிருந்து வந்தவுடன் ஏண்டா இப்படிக் கத்துகிறாய். கை, கால்களை சுத்தம் செய்து கொண்டு வா. சூடாக உனக்குப் பிடித்த சிற்றுண்டி செய்து வைத்திருக்கிறேன். போய், சீருடை மாற்றிக்கொண்டு வா, என்றாள் அவன் தாய். போம்மா என்று கூறிக்கொண்டு மின்விசிறியைச் சுழலவிட்ட பாரி, தொலைக்காட்சியை இயக்கினான். “பள்ளிவிட்டு வந்தவுடனே எதற்கு தொலைக்காட்சி? வீட்டுப் பாடம் செய்து விட்டு அப்புறம் பார்க்கலாம், என்றாள் அவன் தாய்.

**கீழுள்ள அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றுக.**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ரு | சா | எ | அ | கூ | க0 |

**பழமொழி**

1. knowledge is power - அறிவே ஆற்றல்
2. Covert all lose all - பேராசை பெரு நஷ்டம்
3. Diamonds cut diamonds - முள்ளை முள்ளால் எடு
4. Old is gold - முன்னோர் வாக்கு முத்தானது
5. Prevention is better the cure - வருமுன் காப்பதே சிறந்தது
6. Tit for tat - பழிக்குப் பழி
7. Time is gold - காலம் பொன் போன்றது
8. The face is the index of the mind - அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
9. Barking dog seldom bite - குரைக்கிற நாய் கடிக்காது
10. All that glitters is not gold - மின்னுவ தெல்லாம் பொன்னல்ல
11. There is no smoke without fire - நெருப்பில்லாமல் புகையாது
12. Self help is the best help - தன்கையே தனக்கு உதவி
13. Efforts never fail - முயற்சிகள் தோற்பதில்லை
14. Live and let live - வாழ், வாழ விடு;
15. Look before you leap - ஆழம் தெரியாமல் காலை விடாதே
16. Haste makes waste - பதறாத காரியம் சிதறாது

**மொழியாக்கம்**

1. Trees are very useful to us. They give us, timber and firewood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil seeds of some trees. The leaves and fruit of some trees are used to prepare medicines.

   மரங்கள் நமக்கு மிகவும் பயனளிக்கின்றன. மரக்கட்டையும், விறகையும் மரங்கள் தருகின்றன. நாற்காலிகள் மேசைகள் மற்றும் பல கலைப் பொருள் செய்ய மரக்கட்டை உதவுகிறது. சில விதைகளிலிருந்து எண்ணெய் கிடைக்கிறது. சில மரங்களின் இலை, கனி ஆகியவை மருந்து தயாரிக்கப் பயன்படுகின்றன.

2. Early to bed and early to rise make a man healthy, wealthy and wise. The early riser has more time and energy to prepare for the day's work than the late riser. Besides, he finds himself fresh and brisk. Early morning is the most suitable time for study. As the mind is fresh, even a difficult study is made easy.

   " முன் தூங்கி முன் எழுதல்" ஒருவனை உடல் நலமுடையவனாக, அறிவு உடையவனாக ஆக்கும். தாமதமாய் எழுபவனை விட அதிகாலையில் எழுபவனுக்கு அன்றாட வேலைகளைக் கவனிக்க அதிக நேரமும், சக்தியும் கிடைக்கிறது. அவன் தன்னை புத்துணர்ச்சி உடையவனாகவும், சுறுசுறுப்பு உடையவனாகவும் உணர்கிறான். பாடம் படிக்க அதிகாலை நேரமே உகந்தது. மனம் தெளிவாக இருப்பதால் கடினமான பாடப்பகுதி கூட எளிதாகிறது.

## பகுதி - 4

**1. கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக**

கீழ்வானம் சிவக்கத் தொடங்கியிருந்தது. பறவைகள் ஒலி யெழுப்பியவாறே தம்தம் கூடுகளை விட்டுப் பறக்கத் தொடங்கின. அந்த விடியற்காலை நேரத்தில் குமரன்....

(அல்லது)

**2. எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதிப் பழகுக**

1. மழை 2. கடல் 3. பள்ளி

4. வானம் 5. இயற்கைக் காட்சி

எடுத்துக்காட்டாக ஒருதலைப்பு இங்கே கொடுக்கப்படுகிறது. இதனைப் போல் நீங்களும் எழுதிப் பழகுங்கள்.

## இயற்கைக் காட்சி

அழகெலாம் ஆக்கி மாந்தர்
அகத்தெலாம் அவற்றைத் தேக்கி
கழிபெரும் உவகை யூட்டி
கண்பெற்றப் பயனு ணர்த்தும்
அழிவிலா இயற்கை யன்னை
அரங்கேறும் காலைப் போதை
எழுதிடச் சொற்கள் இல்லை
இளங்காலைப் பொழுதே வாழி.

**பகுதி – 5.** .

3. கீழுள்ள பாடலைப் படித்துணர்ந்து அதன் மைக்கருத்தினை எழுதுக இப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களை எடுத்து எழுதுக.

**மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்**
**மனேபாவம் வானைப்போல் விரிவ டைந்து**
**தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கி**
**சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்**
**இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்**
**இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை**
**புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்**
**புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்.**
--- பாரதிதாசன்.

1. மையக்கருத்து:

மனித நேயமும் மக்கள் ஒருமைப்பாடும் ஓங்க நன்நெறி தரும் புலவர்கள் இயற்றிய புத்தகச் சாலைகள் நாட்டில் அமைதல் வேண்டும்.

2. திரண்ட கருத்து:

மனிதர்கள் அன்புடன் வாழும் மனநிலையைப் பெற வேண்டும். தனிமனித அறியாமை இருளை நீக்கவும். அனைவரும் சமம் என்று எண்ணும் உயர்ந்த நோக்கமும் வேண்டும். அதற்கு பெரியோர்கள் கூறிய சிந்தனைகள் அடங்கிய புத்தகச் சாலைகள் நாடெங்கும் பெருக வேண்டும்.

3. அணிநயம் :

வானைப் போல் விரிவடைந்து என்ற தொடரில் போல என்னும் உவம உருபு வந்து அழகு செய்வதால் இப்பாடலில் உவமை அணி பயின்றுள்ளது.

4. எதுகை:

மனிதரெலாம்
தனிமனித
இனிதினிதாய் - இச்சொற்களில் இரண்டாம் எழுத்து **'னி'** ஒன்றி வந்து எதுகைச்
புனிதமுற்று சுவை தந்தது.

5. மோனை : மனிதரெலாம்
மனோபாவம் -- இது போன்று ஒவ்வொரு அடியிலும் முதல் எழுத்து **'ம'** மோனைச் சுவை பெற்று வந்துள்ளது.

6. சந்தம் : சந்தம் பாட்டுக்குச் சொந்தம்

**'தனதனன தானனன தான னான'** என்ற சந்தம் சுவையைத் தருகிறது.

(இதுபோல் வேறு சில பாடல்களைத் தந்து பயிற்சி அளிக்கவும்)

# பகுதி – 6

1. படிவத்தை நிரப்புக

   1. வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் படிவம்



_________ கிளை நாள்________
இடம்________
சேமிப்புக் கணக்கெண்________
பெயர்________
ரூபாய்________ ரூ.

| காசோலை எண்/நாள் | பெறப்பட்ட வங்கி/கிளை | தொகை ரூ. |
|---|---|---|
| | | |

காசோலை விவரம்:
தொகை

காசாளர் எழுத்தர் / மேற்பார்வையாளர்

_________ கிளை நாள்________
இடம்________
சேமிப்புக் கணக்கெண்________
நிலையான கணக்கெண் (PAN)
பெயர்________ ரூ.
ரூபாய்________
காசோலை விவரம்: பண விவரம் :

| காசோலை எண்/நாள் | பெறப்பட்ட வங்கி/கிளை | தொகை ரூ. |
|---|---|---|
| | | |
| | | |

செலுத்துநர் கையொப்பம்

| நாள் | தொகை |
|---|---|
| 1000 × | |
| 500 × | |
| 100 × | |
| 50 × | |
| 20 × | |
| 10 × | |
| 5 × | |
| காசுகள் | |
| மொத்தம் | |

## 2. வங்கிக் கணக்கிலிருந்து பணம் எடுக்கும் படிவம்.

பதித்தவர். பேரேடு : நாள். ............

இந்த ஆணைப் படிவத்துடன் கணக்குப் புத்தகம் இணைக்கப்பட வேண்டும்.

சேமிப்பு வங்கி கணக்கு எண் : ...... ....... .... 20....

கணக்கு வைத்திருப்போர் பெயர்: ..............................

.............. வங்கி .................. எனக்கு அல்லது இதனைக் கொணர்பவருக்கு ரூபாய் ........................................................................... வழங்குக

ரூ

இப்பணம் எடுக்கும் சீட்டு மூலமாக கணக்கு வைத்திருப்பவரைத் தவிர மற்றவருக்கு ஆயிரம் ரூபாய் வரம்பு வரை பணம் கொடுக்கப்படும்.

கணக்கு வைத்திருப்பவர் கையொப்பம்.
அலை பேசி எண் :

### பகுதி 7

**கீழக்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க**

மாறன், வளவனின் நெருங்கி நண்பன். சில நாட்களாக உடல்நலம் இல்லாமல் இருந்த மாறன் நேற்று எதிர்பாராத விதமாக மாடிப் படியிலிருந்து கீழே விழுந்ததில் முற்றிலுமாக தன் நினைவை இழந்து விட்டான். மாறனின் நிலையைக்கண்டு வளவன் மிகவும் மன வருத்தமடைந்தான். உணவு உண்பதற்குக்கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய மனவருத்தம் பெற்றோருக்குத் தெரிந்திருந்தது. அவர்கள் எவ்வளவுதான் கூறினாலும் அவனால் நண்பனுக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தாங்கி கொள்ள இயலவில்லை.

1. வளவன், ஏன் மனவருத்தத்தோடு இருந்தான்?
2. நமக்குத் தாங்கமுடியாத துன்பம் ஏற்படும் போது அதிலிருந்து மீள வழி யாது?
3. இச்சூழலில் பயன்படுத்த வேண்டிய வாழ்வியல் திறன்கள் யாவை?

ஆ) விழிமாற்று திறனாளி ஒருவா் சாலையைக் கடப்பதற்காக நெடு நேரமாகக் காத்துக் கொண்டு இருக்கிறாா். அந்த வழியாகப் பலரும் கடந்து செல்கின்றனா். ஆனால் அவருக்கு உதவ ஒருவரும் முன்வரவில்லை.

1. இதுபோன்றதொரு சூழலில் நீ எவ்வாறு செயல்படுவாய்?
2. பிறருக்கு உதவுவதால் வெளிப்படும் பண்பு யாது?

..

**(இது போல வேறு சில பகுதிகளைக் கொடுத்து பயிற்சி அளிக்கவும்)**

### பிரிவு IV

### பகுதி- 1.

**கடிதம் எழுதும் பயிற்சி**

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க**

அ) உனது ஊருக்குக் குடிநீா் வசதி செய்து தருமாறு மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பம் வரைக.

ஆ) தட்டச்சா் பணிக்கு விண்ணப்பிக்க, தன் விவரப்பட்டியல் உருவாக்குக.

இ) பத்தாம் வகுப்புப் பொதுத் தோ்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

ஈ) வெள்ளத்தில் மூழ்கிய சிறுவனைக் காப்பாற்றியமைக்காக அண்ணா விருது பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

உ) பேருந்து வசதி வேண்டிப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.

**(இக்கடிதங்களைப் பயிற்சி செய்து பார்க்கவும்)**

## பகுதி–2

### பொதுக்கட்டுரைகள்

### 1. தமிழ் மொழியின் சிறப்புகள்.

**முன்னுரை:**

உலகம் தோன்றியபோது தோன்றிய மொழி தமிழ்மொழி. உலகின் முதல் மனிதன் பேசியமொழி தமிழ்மொழி. காலத்தால் மூத்த மொழி. திருந்திய பண்பும், சிறந்த நாகரிகமும் உடைய தூய மொழி. தமிழின் தனிச் சிறப்புகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தனித்தன்மை**

அழியாத இலக்கிய, இலக்கண வளமே தமிழ்மொழியின் தனித்தன்மையாகும். பேச்சு மொழியாக, எழுத்து மொழியாக, ஆட்சிமன்ற மொழியாக, நீதி மன்ற மொழியாக தமிழ் விளங்குகிறது. பிறமொழிகளால் நெருங்க இயலாத பெருமையை உடையது.

**இலக்கிய, இலக்கண வளம்**

இயல், இசை, நாடகம் என்னும் முப்பிரிவுகளைக் கொண்டது தமிழ்மொழி. சங்க இலக்கியங்கள் அனைத்தும் வாழ்வியல் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டவை. தமிழ்மொழி நுண்ணிய அறிவை உண்டாக்க வல்ல இலக்கண வளமுடையது.

**பொதுமைப் பண்பு:**

நம் தமிழ்மொழி,

“ஒன்றே குலம், ஒருவனே தேவன்”
“யாதும் ஊரே, யாவரும் கேளிர்”
“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்”

– என்பன போன்ற பொதுமைப் பண்புகள் நிரம்பிய மொழி.

**நடுவு நிலைமை**

தமிழ்மொழி இனம், மொழி, மதம் கடந்த இலக்கியங்களைக் கொண்டது. அறத்தின் அடிப்படையில் தோன்றிய அமுதமொழி. உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறளைப் பெற்ற செம்மொழி.

**முடிவுரை**

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த தமிழ் மொழியின் பெருமையைக் காப்பது நமது கடமையாகும்.

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"!

## 2. சுற்றுச் சூழல் பாதுகாப்பு.

**முன்னுரை**

நம்மைச் சுற்றியிருக்கும் இடங்களையும் இயற்கைச் சூழ்நிலைகளையும் மாசுப்படாமல் பாதுகாப்பதே சுற்றுச் சூழல் பாதுகாப்பாகும். நம்மைக் காக்கும் பூமியை நாமும் பாதுகாக்க வேண்டும். சுற்றுச் சூழல் பாதுகாப்பின் அவசியம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**நிலத்தூய்மை**

இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லிகள் போன்றவற்றை விளைநிலங்களில் பயன்படுத்துவதால் மண் வளம் மாசுபடுகிறது. வேளாண்மையில் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தால் மண் வளத்தைப் பாதுகாக்க முடியும்.

**நீர்த் தூய்மை**

நோய்கள் பெருக மாசுபட்ட நீரே காரணம். கழிவு நீரையும், இரசாயனக் கழிவு நீரையும் நீர்நிலைகளில் கலப்பதால் நீர் மாசுபடுகிறது. தொழிற்சாலைகளின் கழிவு நீரை மறுசுழற்சி செய்ய வேண்டும். வீட்டுக் கழிவு நீரைச் சரியான முறையில் வெளியேற்ற வேண்டும்.

**காற்றுத் தூய்மை**

தொழிற்சாலை புகை, வாகனப் புகை போன்றவற்றால் வளிமண்டலம் மாசுபடுகிறது. அதிக அளவில் மரங்களை வளர்ப்பதன் மூலம் காற்றைத் தூய்மையாக்க முடியும்.

**முடிவுரை:**

குப்பைகளைக் கண்ட இடங்களில் கொட்டக் கூடாது. மறுசுழற்சி செய்ய முடியாத நெகிழிப் பொருள்களைப் பயன்படுத்தக் கூடாது.

"சுற்றுச் சூழல் காப்போம்!
நோயின்றி வாழ்வோம்!!"

## காலத்தை வெல்லும் கணினி.

**முன்னுரை**

அறிவியலின் அற்புதப் படைப்பான கணினி இன்று மனித மூளையையும் விஞ்சிவிட்டது. கடந்த காலத் தகவல்களைத் தருவதோடு எதிர்காலத்திற்கு வேண்டியவற்றையும் உருவாக்குகிறது.

**தோற்றம்:**

கணினியை ஆலன் எம். டூரிங் என்பவர் 1824-ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். தற்போதைய கணினியை டாக்டர். ஹோலண்ட் என்பவர் 1944-ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். சூப்பர் கணினியை வானடேஸஸ் என்பவர் 1976-ஆம் ஆண்டு உருவாக்கினார்.

**அற்புதம்**

அறிவியல், கணிதம், மருத்துவம், வணிகவியல் என அனைத்துத் துறைகளிலும் பயன்படும் நிலை கணினிக்கு உள்ளது. நூறு மில்லியன் கணக்குகளைக் கூட சரிபார்க்கும் அளவிற்குக் கணினி வளர்ந்துள்ளது.

**சிறப்பு**

கணினி ஏவுகணை, செயற்கைக்கோள் போன்றவற்றையும் கட்டுப்படுத்துகிறது. மின் அஞ்சல் அனுப்பவும் கணினி துணைபுரிகிறது.

**தமிழ் இணையப் பல்கலைக் கழகம்**

கணினியின் சிறப்பறிந்து தமிழக அரசு தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்கியுள்ளது. உலக மக்கள் தமிழ்மொழியை அறிந்து கொள்ள "ரோமனைஸ்டு" என்ற விசைப் பலகையையும் உருவாக்கியுள்ளது.

**முடிவுரை:**

அனைத்துப் பள்ளிகளிலும், கணினிக் கல்வி தரமாகக் கற்பிக்கப்படுகிறது. கணினியை ஆக்க வேலைகளுக்கு பயன்படுத்தி வாழ்வை வளமுடையதாக்குவோம்.

## 4. மழைநீர் சேகரிப்பு

**முன்னுரை**

மழை பெய்யும் காலங்களில் மழைநீர் வீணாகாமல் நிலத்துக்கு அடியில் சேமிப்பதையே மழைநீர் சேகரிப்பு என்கிறோம். மழைநீர் சேகரிப்பின் அவசியம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பற்றாக்குறை ஏன்?**

மக்கட்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப நீர்நிலைகள் பெருகவில்லை. கிடைத்த நீரையும் நாம் சரியான முறையில் பாதுகாக்கவில்லை. எனவே தான் கோடைக் காலங்களில் கடும் வறட்சி நிலவுகிறது.

**மழைநீர் சேகரிப்பு**

நிலத்தடி நீர்வளம் குறைந்து விட்டது. போதிய அளவு மழையும் பெய்வதில்லை. மழை பெய்யும் காலத்தே வீணாகும் மழைநீரை பூமிக்கடியில் சேகரிக்க வேண்டும். வீடுகளில் தொட்டிகள் அமைத்தும், நீர்நிலைகளை ஆழப்படுத்தியும், புதிய அணைகள் கட்டியும் மழைநீரைச் சேமிக்கலாம்

**மழை நீர் சேகரிக்கும் முறைகள்:**

ஆறு குளங்களில் தேக்கி ஆழ்குழாய்க் கிணறு அமைத்து வீடுகளில் மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைத்து. மழை நீரைச் சேமிக்கலாம்.

**பயன்கள்**

நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும், கடல்நீர் நிலப்பகுதியில் உட்புகுவதைத் தடுக்கவும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும், எதிர்காலத் தலைமுறையின் தண்ணீர் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்யவும் மழைநீரை சேகரிக்க வேண்டும்.

**முடிவுரை**

மரங்களை வளர்த்து மழைவளம் பெருக்க வேண்டும். தண்ணீர்ப் பற்றாக்குறையை முற்றிலுமாகப் போக்க வேண்டும்.

"மழை நீரைச் சேகரிப்போம்!
வருங்காலத் தலைமுறையைக் காப்போம்!!"

## நிலை – 2
## கூடுதல் திறன் உடைய மாணவர்களுக்காக
## பகுதி-- 1

1. **கொடுக்கப்பட்ட தொடரை மற்றொரு தொடராக மாற்றுதல்**
    1. இளமையில் கல் --- செய்தித் தொடராக்குக
       விடை : இளமையில் கற்க வேண்டும்
    2. திருக்குறளை அனைவரும் அறிவர் (வினாத் தொடராக்குக )
       **விடை : திருக்குறளை அனைவரும் அறிவரோ?**
    3. இமயமலை மிகவும் உயரமானது--- (உணர்ச்சித் தொடரக்குக)
       **விடை : ஆ!என்னே! இமயமலையின் உயரம்!**

## பகுதி - 2

2. **கீழக்காணும் தொடரில் ஒருமைப் பன்மை பிழை நீக்கி எழுதுக**
    1. பெண்கள் பெற வேண்டியது பெண்கல்வி,பெண்ணுரிமை,சொத்துரிமை
       விடை :பெண்கள் பெற வேண்டி**வை** பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.
    2. அவன் கவிஞன் அல்ல.
       விடை : அவன் கவிஞன் அல்**லன்.**
    3. புலவர்கள் பொங்கல் புது நாள்களின் மாண்பினை உணர்ந்து கொண்டாடினர்.
       விடை : புலவர்கள் பொங்கல் புது **நாளின்** மாண்பினை உணர்ந்து கொண்டாடினர்.
    4. மேடைப் பேச்சுக்கு கருத்துகளே உயிர்நாடி போன்றது.
       விடை : மேடைப் பேச்சுக்கு கருத்துக்களே உயிர்நாடி **போன்றன.**
    5. இயங்குரு படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றது.
       விடை : இயங்குரு படங்களை குழந்தைகள் விரும்பி **பார்க்கின்றன.**
    6. தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருக்கின்றன.
       விடை : தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் **பெற்றிருந்தது**.
    7. ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்.
       விடை : ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் **கொண்டிருந்தாள்.**

8. மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருத்தல் மட்டும் போதா.
விடை : மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருத்தல் மட்டும் **போதாது.**
9. பெண்கள் எல்லாத் துறைகளிலும் பணிபுரிகின்றாள்
விடை : பெண்கள் எல்லாத் துறைகளிலும் **பணிபுரிகிறார்கள்.**

**பகுதி – 3.**

1. **பொருளறிந்து பொருத்துக.**

இடர் -- துன்பம்
நாவாய் -- படகு
இறை – தலைவன்
இந்து – நில**வு.**

2. **பொருளறிந்து பொருத்துக**

கான் -- காடு
உழுவை – புலி
மடங்கல் -- சிங்கம்
எண்கு -- கரடி

3. **ஒன்றொழி பொதுச்சொல்லைச் சான்றுடன் விளக்குக**

உயர்திணை,அஃறிணை, ஆகிய இரண்டிலும் உள்ள பொதுவான சொற்களுள் குறிப்பால் ஒரு பாலை நீக்கி மற்றொரு பாலைச் சுட்டுதல்
(எ.கா) 1.வீட்டின் முன் ஐவர் கோலமிட்டனர்
2. ஆயிரம் மக்கள் போருக்குச் சென்றனர்

4. **வெண்பாவின் பொது இலக்கணம் கூறுக**

1. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நான்கு சீர்களாய் அமையும்
2. ஈற்றடியின் ஈற்றுச் சீர் நாள் மலர் காசு பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்று பெற்று நிறைவு பெறும்.
3. செப்பலோசை பெற்று வரும்
4. இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் பயின்று வரும் பிற தளைகள் வாரா.

5. **ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் கூறுக**

1.அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வரும்.
2. ஈற்றடியின் ஈற்றுச் சீர் ஏ, ஐ, ஆய், ஓ - போன்ற எழுத்துக்களைக் கொண்டு முடியும் எனினும் **ஏகார**த்தால் முடிவதே சிறப்பு
3. அகவலோசை பெற்று வரும்
4. நேரொன்றாசிரியத் தளையும் நிரையொன்றாசிரியத் தளையும் பெற்று வரும் பிற தளைகள் விரவி வரும்.

6. **வெண்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

வெண்பா ஆறுவகைப்படும்.
குறள் வெண்பா
நேரிசைச் சிந்தியல வெண்பா
இன்னிசைச் சிந்தியல வெண்பா
நேரிசை் வெண்பா
இன்னிசை் வெண்பா
பஃறொடை வெண்பா

7. **ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

ஆசிரியப்பா நான்கு வகைப்படும்
1. நேரிசை ஆசிரியப்பா
2. இணைக்குறள் ஆசிரியப்பா
3. நிலை மண்டில ஆசிரியப்பா
4. அடிமறி மண்டில ஆசிரியப்பா

**8. நேரிசை வெண்பாவை எடுத்துக்காட்டுடன் விளக்குக**

1. வெண்பாவின் பொது இலக்கணங்கள் அனைத்தையும் பெற்று வரும்
2. இரண்டாம் அடியின் நான்காவது சீர் தனிச் சீராய் அமையும்

எ.கா :

தானங் கொடுக்குந் தன்மையும் மானத்தார்
குற்றங் கடிந்த வொழுக்கமும் -- தெற்றெனப்
பல்பொருள் நீங்கிய சிந்தையும் இம்மூன்றும்
நல்வினை யார்க்குங் கயிறு.

**9. இனங்குறித்தல் என்றால் என்ன?**

- தன் பொருள் குறித்தல்
- தனக்கு இனமான பொருளையும் குறித்தல்
  (எ.கா) கதிர்வேல் வெற்றிலை தின்றான்

**10. பொதுமொழி என்றால் என்ன? எடுத்துக் காட்டுடன் விளக்குக.**

- தனித்து நின்று தன் பொருளையும்
- தொடர்ந்து நின்ற இரு பொருளையும் தருவது
  பலகை (மரப்பலகை) -- பல+கை (பல கைகள்)
  தாமரை ( பூ ) -- தா+மரை (தாவுகின்ற மான்)

**11. தெரிநிலை வினைமுற்று – விளக்குக** .

- செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆறினையும், தெரிவித்து
- காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது
  (எ.கா) உழுதான்

12. **வகையைத் குறிப்பிட்டு, அதன் இலக்கணம் எழுதுக.**

**தாய்மொழி வளர்த்தல் தமிழர்தங் கடனே**
**வாய்மொழி புரத்தல் மற்றவர் கடனே**
**காய்மொழி தவிர்த்தல் மற்றவர் கடனே**
**ஆய்மொழி யுரைத்தல் அறிஞர்தங் கடனே**

**இது அடி மறி மண்டில ஆசிரியப்பாவை சார்ந்தது**

- இப்பாடல் ஆசிரியப்பா பொது இலக்கணம் பெற்றது
- அடிகளை முன்பின்னாக மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாது
  (ஒரு பாடலில் கடைசி அடியில் மூன்று சீர்கள் இருந்தால் வெண்பா என்றும் நான்கு சீர்கள் இருந்தால் ஆசிரியப்பா என்றும் எழுதவும்)

**13. கீழுள்ள பாடலில் பயின்று வரும் பா வகையைச் குறிப்பிட்டு, அதன் இலக்கணம் எழுதுக.**

பார் மொழிகள் அத்தனைக்கும் பாங்கான நற்றாயாம்
சீர் கொண்ட செந்தமிழே சிந்தனையில் ஏற்றிடுவாய்
பார் முழுதுஞ் சாற்றிடுவாய் பாய்ந்து

- இது இன்னிசைச் சிந்தியல் வெண்பா.
- வெண்பாவின் பொது இலக்கணம் பெற்றுவரும்
- மூன்றடிகளை உடையது
- ஒரு விகற்பத்தால் ஆனது.

**14. ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய கருப்பொருள்கள் நான்கு கூறுக**

(குறிஞ்சி நிலத்திற்கு உரிய கருப்பொருள்கள் நான்கு கூறுக இது போன்ற வினாக்களுக்கு கீழுள்ள இட்டவணையிலிருந்து எடுத்து எழுதுக)

| நிலம் | தெய்வம் | மக்கள் | விலங்கு | யாழ் | பண் |
|---|---|---|---|---|---|
| குறிஞ்சி | முருகன் | குறவன், குறத்தி | கரடி, சிங்கம் | குறிஞ்சி யாழ் | குறிஞ்சிப் பண் |
| முல்லை | திருமால் | ஆயர், ஆய்ச்சியர் | முயல், மான் புலி | முல்லை யாழ் | முல்லைப் பண் |
| மருதம் | இந்திரன் | உழவர், உழத்தியர் | எருமை, நீர்நாய் | மருதம் யாழ் | மருதப் பண் |
| நெய்தல் | வருணன் | சேர்ப்பன் , சேர்ப்பி | முதலை, சுறா | நெய்தல் யாழ் | நெய்தல் பண் |
| பாலை | கொற்றவை | எயினர் , எயிற்றியர் | வலிவிழந்த யானை | பாலை யாழ் | பாலைப் பண் |

15. **எடுத்துக்காட்டு** :

**மருத நிலத்திற்கு உரிய கருப்பொருள்கள் நான்கு**

1. தெய்வம் -- இந்திரன்
2. மக்கள் -- உழவர் , உழத்தியர்
3. விலங்கு -- எருமை, நீர்நாய்
4. யாழ் -- மருத யாழ்
5. பண் -- மருதப் பண்
6. முரசு -- மணமுழவு

இதுபோல் ஏனைய கருப்பொருள்களைக் கண்டு எழுதவும்.